www.padippakam.com

# பெண்

தொகுதி - 7 இதழ் : 2











"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

படிப்பகம்

www.padippakam.com

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல: 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல: 065 - 23297
Fax No : 065-23297, E-mail : suriyaw@slt.lk

THE WOMAN - **A Journal Published by**
**Syriya Women's Development Centre,**
**No : 20, Dias Lane,**
**Batticaloa.**

ஆசிரியை - **விஜயலட்சுமி சேகர்**

அச்சகம் - **சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.**

விலை - **40/=**



படிப்பகம்

www.padippakam.com

# உங்களுடன் . . . . . .

இந்த வருடத்திற்குரிய இரண்டாவது "பெண்" சஞ்சிகை மூலம் தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப் "பெண்" சஞ்சிகையில் ஒரு சிலரே தொடர்ந்தும் எழுத்தாளர்களாக அடை யாளம் காணப்படாமல் புதிய புதிய பெண் எழுத்தாளர்கள் அடையா ளம் காணப்பட வேண்டும். எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதுவே எம் நோக்கும், இந்நோக்கத்தின் வெற்றிப் படியுமாகும்.

இன்று பெண்களின் உணர்வுகளை பெண்களே அவர்கள் நிலை நின்று சொல்வதுபோல், பெண்களின் பிரச்சினைகளையும் அவர் கள் உரிமையின் அவசியத்தையும், அவர்கள் போராட்டத்தையும், அதன் தேவையையும், நியாயத்தையும் உணர்ந்துகொண்ட ஆண்களும் பெண்கள் நிலைநின்று எழுதுவது எமக்கு உற் சாகத்தை வழங்குகின்றது. அந்த வகையில் இச்சஞ்சிகைக் கென "பெண்களும் போரும்" கவிதையை தமிழாக்கம் செய்து வழங்கிய எழுத்தாளர் உட்பட "அழகு ராணி" சிறுகதை, "தனியார் பேருந்திலே", கவிதை ஆகிய ஆக்கங்களை வழங்கிய ஆண் எழுத்தாளர்கள் போன்று தொடர்ந்தும் பல ஆண் சகோதரர் கள் எம்முடன் இணைந்து குரல்கொடுத்து வருவதை எம் சஞ்சிகைகளில் காணலாம்.

எனினும் சிலர் எம் நோக்கத்தை விளங்கிக் கொள்ளாமல் இருப்ப தும் அதனால் சமூகத்திற்கும், பெண்களுக்கும் தவறான கருத் துக்கள் பரவுவதும் நீண்டுகொண்டே உள்ளது.

உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் எம் பாதையில் தடைக்கல்லாய் உள்ள போதும் பெண்களின் தனித்தும் கால நீரோட்டத்தில் அடிபட்டு, அமிழ்பட்டு போகாமல் அனைத்து தளங்களிலும் நிலைநிறுத்துவதற்கு இவ் வெளியீடுகள் உதவ வேண்டும்.

**ஆசிரியை**


படிப்பகம்

www.padippakam.com

உள்ளே . . .


பெண்ணிலை வாதமும் ஆக்க இலக்கியமும் 1 - 6
நிர்ப்பந்தம் 7
அழகுராணி 8 - 10
மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக ... 11 - 14
வாழ்வு இதுவல்ல 15 - 16
அசதி 17
வெளவால் 18 - 24
வீட்டுவன்முறை அல்லது வீட்டிம்சை ... 25 - 33
பெண்களும் போரும் 34 - 35
சந்தர்ப்ப மிருகம் 36 - 37
தனியார் பேருந்திலே 38 - 39
என்னைப் போல் 40
பரிநிர்வாணம் ...? 41
கனடா - இலங்கை இளைஞர், யுவதிகள் ... 42 - 45
சோர்ந்திடும் மனமே மீண்டெழு ... 46
மட்டக்களப்பு கிராமியப் பெண்களும் .... 47 - 53
இன்றும் பெண்கள் ... 54 - 55
பட்டது துளிர்த்தது 56 - 60
கடிதங்கள் 61 - 63
…ந்தா




படிப்பகம்

www.padippakam.com

# பெண்நிலை ஆக்க இலக்கியம் : பெண் அனுபவமும் மொழியும்

மௌ. சித்திரலேகா

பெண்நிலை ஆக்க இலக்கியம், பெண்களின் அனுபவமும் மொழியும் என்பது குறித்துச் சில கருத்துக்களை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பெண்நிலைவாதம் என்பது ஒரு வாழ்க்கை முறை என்பதுதான் அது கூறுகின்ற எல்லா விடயங்களையும் தொகுத்துப் பார்க்கும்போது எமக்குக் கிடைக்கும் சாராம்சமாகும். சகல வகையான ஒடுக்குதல்கள், அடக்கு முறைகள், பாரபட்சப்படுத்தல்கள் போன்றவற்றையெல்லாம் மறுத்து உயிரிகள் என்ற வகையில் மனிதர் / மனுஷி தம்மைத் தம்முடைய இலட்சியங்கள், கனவுகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள், நடை முறைகள், வாழ்க்கை முதலியவற்றை வாழக்கூடிய ஒரு சாத்தியத்தை உருவாக்குகின்ற விடயந்தான் அல்லது உருவாக்குதல்தான் பெண்நிலைவாதம் என்று சொல்லலாம். இதற்காகச் சில கருத்துத் தெளிவுகளும் சிந்தனைகளும் எமக்கு வேண்டும். இந்த உணர்வு, அனுபவம் என்பவற்றுடன் சேர்த்து இதனை எவ்வாறு நாம் சாதிக்கப் போகின்றோம் அல்லது சாத்தியப்படுத்தப் போகின்றோம் என்பது தொடர்பான விவாதங்கள், கலந்துரையாடல்கள், தெளிதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சில திட்டமிட்ட செயல்கள் எமக்குத் தேவை.

ஆகவே இந்தப் பெண்நிலைவாதம் என்பது எம்முடைய வாழ்க்கை முறை, அவற்றின் அடிப்படையாக எழுகின்ற சிந்தனைத்தெளிவு, வாழ்தல், செயல்முறை யாவற்றையும் உள்ளடக்கிய ஒன்று எனலாம்.

ஆக்க இலக்கியங்கள் என்று சொல்லும் பொழுது இன்று இலக்கிய உலகு அல்லது கலை உலகு ஆண்களின் உலகாகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றது என்ற ஒரு எடுகோளுடன் அல்லது ஒரு யதார்த்தத்தினைச் சுட்டிக்காட்டுவதுடன் நான் என்னுடைய கருத்தைத் தொடங்கலாம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் குறிப்பாகத் தமிழில் எழுதுகின்ற எம்மவர் மத்தியில் இந்த எழுத்தாளர் என்கின்ற பதமே, அது எழுப்புகின்ற படிமமே ஒரு ஆணைச் சுட்டுவதாக அமைகிறது. கலைஞர் என்கின்ற அல்லது ஓவியர் என்கின்ற சொற்கள் - இவற்றை நாம் பொதுப்பாற் சொற்கள் இவை ஆணையோ, பெண்ணையோ குறிக்கவில்லை என்று சொன்னாலும் கூட எழுத்தாளர், கலைஞர், ஓவியர், கவிஞர் முதலிய இந்தச் சொற்கள் எழுப்புகின்ற பிம்பங்கள் ஆண்களைச் சுட்டுவதாகவே அமைந்திருக்கின்றன. இந்த ஒரு பின்னணியில்தான் இன்று நாம் எழுத்தாளி, கவிஞை,



படிப்பகம்

www.padippakam.com

ஓவியை, கலைஞை என்கின்ற சில சொற்களை உருவாக்கி அவற்றைப் பழக்கத்தில் கொண்டு வர நினைக்கின்றோம். ஏனென்றால் பெண்களுடைய கலையாற்றல்கள், ஆக்கத்திறன்கள் ஆகியவற்றை அடையாளப்படுத்துவதற்காக இத்தகைய சவால்களும், பிரச்சினைகளும் நிறைந்த கலை, இலக்கிய உலகில் பெண்கள் காலடி எடுத்துவைக்கும் பொழுது அவர்களுடைய அனுபவங்களை அவர்கள் எவ்வாறு இந்தக் கலை இலக்கியத்தில் வெளிக் கொண்டுவரப் போகின்றார்கள் என்பது ஒரு பிரச்சினையாகும். அவர்கள் எவ்வாறு மொழியின் மூலமும் தங்களுடைய ஆக்கத் திறன்களின் மூலமும் அவற்றைப் பேசப்போகின்றார்கள் என்பது ஒரு முக்கியமான ஒரு பிரச்சினையாகும். ஏனென்றால் எங்களுடைய மரபில் குறிப்பாகத் தமிழ் மரபில் எங்களுக்கு நிலை நிறுத்தப்பட்டதும் அல்லது அங்கீகரிக்கப்பட்டதுமான இலக்கிய மரபும் சரி (அல்லது மொழியினுடைய அமைப்பு அதன் தன்மை அதனுடைய இலக்கணம் ஆகியவற்றைக் கூறுகின்ற) தமிழ் இலக்கண மரபும் சரி பெண்களுக்கு மொழியை மறுத்துப் பேசுவதாகவே இருந்திருக்கின்றன. பெண்கள் பேசக்கூடாது. பெண்களுக்கு மொழியில்லை என்ற கருத்துப்பட இன்று நாம் கல்வி நிறுவனங்களில், போற்றிப் புகழுகின்ற தொல்காப்பியம் போன்ற நிலைநிறுத்தப்பட்ட இலக்கண நூல்கள் கூறி வந்திருப்பதனை சுட்டிக் காட்டல் வேண்டும்.

இத்தகைய ஒரு மரபில்தான் பெண்கள் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைக்க வேண்டியுள்ளது. ஏனென்றால் இந்த இலக்கிய மரபில் குறிப்பாக எழுத்திலக்கிய மரபில் பெண்களுக்கு இடமில்லாத ஒரு நிலை நீண்டகாலமாக நிலவி வருகின்றது. ஏனென்றால் எமது சமூகத்தில் குறிப்பாக தென்னிந்திய சமூகங்களில் பால்நிலையாலும், சாதியாலும் எழுத்தறிவு என்பது மறுக்கப்பட்ட நிலை நீண்ட காலமாக நிலவி வந்தது. இரண்டாவதாகப் பரந்துபட்ட மக்களிடையேயான இலக்கியம் என்பது வாய்மொழியாகவும், நிகழ்த்துகையாகவும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இந்த ஒரு நிலையில் பெண்களுடைய இலக்கியமும், பெண்களுடைய கலைகளும் இத்தகைய வாய்மொழி மரபின் அடியாகவே நிலவியுள்ளன. ஆனால் வாய்மொழி மரபில் இருந்த எழுத்து முறைக்கு இலக்கியம், கலைகள் ஆகியவை மாறி அவை நிலைநிறுத்தப்பட்டு அங்கீகாரம் பெறுகின்ற ஒரு நிலையில் பெண்களும் வாய்மொழி மரபிலிருந்து எழுத்துநிலைக்கு வருவது விரும்பியோ, விரும்பாமலோ நிகழ்ந்து விடுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இத்தகைய ஒரு நிலையில் வாய்மொழி மரபிலிருந்து எழுத்துமொழிக்கு வரும்பொழுது பெண் இலக்கியகர்த்தாக்களுக்கு பிரச்சினைகள் வருகின்றன. ஏனென்றால் எழுத்து மொழி ஒரு உத்தியோகபூர்வமான, அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரம் மிக்க மொழியாக எங்களுடைய சமூகத்தில் வழங்குகின்றது. எங்களுடைய சமூகத்தில் மாத்திரமல்ல



படிப்பகம்

www.padippakam.com

எல்லா சமூகங்களிலும் வழங்கும் எல்லா எழுத்து மொழிகளும் உத்தியோகபூர்வமான அதிகாரரீதியான மொழியாகத்தான் இருக்கின்றன. ஏனென்றால் மொழி என்பது வெறுமனே கருத்துக்களையும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாக மாத்திரமல்லாமல் அது அந்த சமூகம் கடந்து வந்த வரலாறு அந்த சமூகத்தில் காணப்படுகின்ற விழுமியங்கள், மதிப்பீடுகள், கருத்துக்கள் எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு உருவாகியதாகத் தான் இருக்கின்றது. மொழியினுடைய மரபுத் தொடர்கள், சொற்கள், உவமைகள் யாவும் சமூகத்தினுடைய கருத்துக்கள், விழுமியங்கள் ஆகியவற்றை உள்வாங்கிக் கட்டமைக்கப்பட்டனவாகவே உள்ளன.

ஆகவே மொழியைப்பற்றிப் பேசும்போது அந்த மொழிக்கு ஊடாகக் காணப்படுகின்ற அதிகாரக்கட்டமைப்பு பற்றியும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். மொழியின் உட்கட்டுமானத்தில் உள்ள ஆதிக்க உணர்வுகள் பற்றியும் அவை எவ்வாறு மொழியில் ஊடுருவிக் காணப்படுகின்றன என்பதைப்பற்றியும் நாம் நிறையச் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் பெண்கள் பற்றிய பாரபட்சமான ஒரு மனோநிலை எமது சமூகத்தில் தொடர்ந்து வந்திருக்கின்றது. இந்த பாரபட்சமான, பெண்களைத் தாழ்த்தி வைக்கின்ற அவர்களது ஆளுமையை மறுக்கின்ற மொழி, குறிப்பாக எழுத்து மட்டத்திலான மொழி எமக்கு பழக்கமாகி வந்திருக்கின்றது.

மொழி ஆற்றலின் ஊடாக வெளிப்படுகின்ற ஒன்று இலக்கியம் என்று அதனை மிகச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளலாம். இந்த மனித அனுபவம் ஒன்று அல்ல; அது வெவ்வேறு வகையான அனுபவம். மனிதர்களுடைய வாழ்நிலைகளின் அடிப்படையாக அவர்களின் அனுபவம் வித்தியாசப்படுகின்றது. இந்த வித்தியாசங்களைத் தோற்றுவிக்கும் ஒன்று இந்த பெண்களுடைய வாழ்தல் ஆகும். பெண்களுடைய வாழ்தல், ஆண்களுடைய வாழ்தலில் இருந்து மிகவும் வித்தியாசமானது. இந்த வெவ்வேறு வகையான அனுபவங்களை நாம் எவ்வாறு எங்களுடைய பொது மொழியில் உத்தியோகபூர்வமாக இதுவரை அங்கீகரிக்கப்பட்ட மொழி வடிவில், எம்மிடையே வழங்குகின்ற பழமொழிகள் அல்லது மரபுத் தொடர்கள், எங்களுக்குப் பழக்கமான உவமைகள், உருவகங்கள், ஊடாக எவ்வாறு கொண்டு வரப்போகின்றோம்? இது ஒரு முக்கியமான கேள்வி. ஏனென்றால் பெண்களினுடைய அனுபவங்கள் வேறுபடுகின்றன. பெண்கள் வித்தியாசமாக உணர்கின்றார்கள் என்பதை உணர்ந்த மறுகணமே அவை பேசப்படாமல் இருந்தாலும், இந்த பெண்கள் உணர்கின்ற அந்த உணர்வுகளை அவர்களுடைய வித்தியாசமான அனுபவங்களை ஆண்களால் கட்டமைக்கப்பட்டு வந்திருக்கின்ற ஆண்நோக்கு, பெண்க



படிப்பகம்

www.padippakam.com

ளைப் பாரபட்சப்படுத்துகின்ற நோக்கு பொதிந்திருக்கின்ற மொழி மூலம் எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகின்றது. ஏனென்றால் இன்று இலக்கியம் தனியே இலக்கியமாக மாத்திரம் இல்லை. அது பொது சன ஊடகங்கள் ஊடாக, குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி ஆகியவை ஊடாகவும் அந்த இலக்கியங்கள் மீளமீள உருவாக்கப்படுகின்றன.

உதாரணமாக இராமாயணம் கதை மரபில் மாத்திரமல்ல அது வான்மீகி இராமாயணமாகக் கம்பருடை இராமாயணமாகப் பிறகு டெலி விஷன் தொடரில் வருகின்ற இராமாயணமாக, கம்பன் விழாக் காட்டுகின்ற இராமாயணமாக இன்று வெவ்வேறு வகையான இராமாயணமாக வியாக் கியானம் பெறுகின்றது.

ஆகவே இலக்கியம் என்பது இன்று தனியே அதை உருவாக்குபவ ரால் மாத்திரமல்ல அதைக் கேடபவராலும் வெவ்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது, அபகரிக்கப்படுகின்றது என்றுகூட நான் சொல்வேன். அது மாத்திரமல்ல இலக்கியங்களைப் பரப்புவதில், அவற்றை மறு வியாக் கியாணம் செய்வதில் ஒன்றை உயர்த்தி ஒன்றை கீழே வைப்பதில் எமது கல்வி நிறுவனங்களும் மிகவும் முக்கியமான பங்கெடுத்துக் கொள்கின்றன.

இத்தகைய ஒரு பின்னணியில்தான் இந்த வித்தியாசப்பட்ட பெண்களுடைய அனுபவங்களை, பெண்கள் தங்களையே பாரபட்சப் படுத்துகின்ற, தங்களுடைய அனுபவங்களையே மறுக்கின்ற ஒரு மொழி யில் எவ்வாறு சொல்வது என்பது எம்மிடையேயுள்ள முக்கியமான கேள்வி. ஏனென்றால் சில விஷயங்கள், சில சொற்கள், சில மரபுத்தொடர் களைப் பெண்கள் பேசக்கூடாது; காரசாரமான விவாதங்களுக்குரிய கருத்துக்களை அவர்கள் முன் வைக்கக்கூடாது என்கின்ற ஒரு மரபு எங்கள் மத்தியில் இருக்கின்றது. இதுவும் கருத்துக்களுடைய வன்முறை யாகவும், மொழியினுடைய வன்முறையாகவும் காணப்படுகின்றது. இத்தகைய மொழியின், கருத்துக்களின் வன்முறையை நாம் புறந்தள்ளி எமது அடை யாளத்துடன் எழுதுதல், பேசுதல் எத்தகைய சிக்கல்களை ஏற்படுத்தும்? இத்தகைய சிக்கல்கள் பெண்கள் எழுதத்தொடங்கவும், பேசத் தொடங் கவும், உருவாகின்றன. பல இளம் பெண்கள், எழுதுகின்ற பெண்களுடன் பழகுகின்ற ஊடாடுகின்ற வாய்ப்பு எனக்கு நிறையவே இருக்கின்றது. அவர்கள் சுயதணிக்கையில் ஈடுபடுவதை நான் பார்த்திருக்கின்றேன். முதல் எழுதுவார்கள், அதை பின்னர் வெட்டுவார்கள். முதல் எழுதுகின்ற அந்த முதலாவது வரைவுக்கும், அவர்கள் அதனை மெருகுபடுத்துகின் றாம் என்று சொல்லி பிறகு எழுதுவதற்கும் இடையில் நிறைய வித்தியா சங்கள் இருக்கும். கருத்துரீதியாகவே நிறைய வித்தியாசங்கள் இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய தணிக்கையை நாம் எவ்வாறு மீறப் போகின்றோம்? இது இன்னொரு கேள்வி. அடுத்தது சமூக நிர்ப்பந்தம். மொழியைக் கையாள் வதற்கு அனுபவங்களைப் பேசுவதற்கு எமக்கு வெளியில் இருந்து வருகின்ற சமூக நிர்ப்பந்தம்.

மூன்றாவதாக இத்தகைய இலக்கிய முயற்சிகளில் பெண்கள் இறங்கும்பொழுது பொதுவாக நாம் எதிர்கொள்கின்ற புறக்கணிப்பும், அலட்சியமும் ஆகும்.

நான் நினைக்கின்றேன் அனுபவங்களையும், உணர்வுகளையும் தங்களுடைய சொந்த மொழியில் தடைகளைத்தாண்டி எழுதுவது பெண்விடுதலையினுடைய ஒரு முக்கியமான பகுதி என்று. ஏனென்றால் பெண்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்வது என்பது தங்களுடைய அடையாளத்தை வெளிப்படுத்துவதன் ஒரு அம்சமாக தவிர்க்க முடியாமல் நிகழ்கின்றது. ஆகவே பெண்களது எழுத்திலக்கியம் என்பது ஒரு வகையான கோரிக்கையும், செயல்வாதமும் என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால் தன்னைச் சிறைபிடித்து வைத்திருக்கின்ற அந்த மொழிக்குள் இருந்து விடுதலை பெறுவது, விடுதலையின் முக்கியமான ஒரு அம்சம். இதற்கு இன்னொன்றை நாம் செய்யவேண்டும் என நினைக்கின்றேன். பெண்களுடைய மரபாக, பெண்கள் அதிகமாகப் பேசுவதாக இருப்பது - பெண்கள் குசுகுசுப்பார்கள், மற்றவர்களைப் பற்றிப் புறம் கூறுவார்கள்; ஏசுவார்கள் இதெல்லாம் பெண்களுடைய மொழி என்று எமக்குக் கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் கதைப்பது அவர்களுடைய கருத்துக்கள் என்பது குசுகுசுப்பு என்பதாக வரையறை செயயப்பட்டிருக்கிறது. வாய் மொழி மரபு இலக்கியமொழியாக வரவேண் டுமானால் அல்லது பெண்களுடைய இலக்கிய மரபை இலக்கிய மொழி யினுடைய பலத்தை நிறுவுவதற்கு நான் இந்த வாய்மொழி மரபில் ஆரம் பிக்கவேண்டும் என நினைக்கின்றேன். இதுவும் எங்களுடைய அனுபவமாக இருக்கின்றது. ஏனென்றால் கதை எழுதுவது நாடகத்தை உருவாக்குவது என்பது அது எங்கிருந்தோ வருகின்ற அல்லது பிறவியில் ஏற்படுகின்ற ஒரு ஆற்றல் அல்ல. அது பயிற்சியினால், பழக்கத்தினால் வாசிப்பினால் எங்களுடைய ரசனையினை எங்களது உணர்வுகளை ஆழப்படுத்திக் கொள்வதனால் வருகின்ற ஒன்று. பயிற்சிகள் ஊடாகப், பயிற்சிப் பட்டறைகள் ஊடாக கவிதைகள் எழுதத் தொடங்கிய பல பெண்கவிஞைகளை நான் பார்த்திருக்கின்றேன். சூரியா பெண்கள் நிறுவனத்தினர் சமீபத்தில் 'வெளிப் படுதல்' என்கின்ற கவிதைத் தொகுதியினை வெளியிட்டனர். அதில் எழுதி யுள்ள பெண்கள் இரண்டு வகையாகக் கவிதைகள் எழுதினார்கள். ஒன்று 'தனிப்பட எழுதிய கவிதைகள்' இரண்டாவதாகக் 'கூட்டாக எழுதிய


படிப்பகம்

www.padippakam.com

கவிதைகள்', - கூட்டுக்கவிதைகள். எங்களுடைய வாய்மொழி மரபில் கூட்டுப்பாடல்களும் இருக்கின்றன. இந்தப் பின்னணியில் இந்த வாய்மொழி மரபில் உள்ள அம்சங்களை இனம் கண்டு அவற்றை எங்களுடைய சொத்தாகச் சுவீகரித்துக்கொண்டு பெண்கள் எழுதுவதற்கு அல்லது பேசுவதற்கு அல்லது பாடுவதற்கு முன்வரவேண்டும்.

சமீபத்தில் வெளிவந்த சில பெண்கள் கவிதைத்தொகுப்புகளின் தலைப்புகள் பெண்களுக்கு மொழியில் உள்ள சிக்கலைச் சொல்கின்றன. ஆழியாளின் 'உரத்துப்பேச', அவ்வையினுடைய 'எல்லைகடத்தல்', பிரான்சில் இருந்து வந்த மறையாதமறுபாதி, முதன்முதல் இலங்கையில் வெளியிடப் பட்ட பெண்களுடைய கவிதைத்தொகுதியான சொல்லாத சேதிகள் போன்றவற்றினுடைய தலைப்புகளைப் பார்த்தால் எல்லை கடத்தல், உரத்துப் பேச, சொல்லாத சேதிகள் என்ற தலைப்புகளே பெண்களுக்கு மொழியில் உள்ள சிக்கலையும் அவர்களுடைய அனுப வத்தை மொழியால் வடிப்பதில் உள்ள சிக்கலையும் எடுத்துப் பேசுவதாக இருக்கின்றன. இங்கு ஒரு கேள்வி வருகின்றது. பெண் அனுபவம் பற்றி ஆண் எழுத்தாளர்கள் என்ன செய்யலாம்? அவர்கள் எழுத முடியாதா? அவர்கள் இதற்குப் பங்காற்ற முடியாதா? பெண்களுடைய அனுபவத்திற்கு ஆண்கள் பக்கபலமாக இருக்க முடியாதா?

பெண்களுக்கு எவ்வாறு தம்மைச் சிறைப்படுத்துகின்ற இந்த மொழியில் இருந்து விடுபடுவது என்பது ஒரு தன்னுணர்வுள்ள போராட் டமாக இருக்கின்றதோ அதேபோலத் தான் ஆண்களும் நீண்டகாலம் இடைவிடாத ஒரு போராட்டத்தை பெண்களைப் பற்றிய பாரபட்சமான விழுமியங்களில் பொதிந்து வைத்திருக்கின்றன. மொழியில் இருந்து விடு பட்டு எழுதுவதற்கு முனைய வேண்டும். அதற்கான போராட்டம் அவர்க ளிடம் இருக்கும்பொழுதுதான் அந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபடும் போதுதான் ஆண்கள் பெண்நிலை வாதிகளாக இல்லாவிட்டாலும் பெண் களுடைய அனுபவத்தை உணரா விடிலும் பெண்களுக்குச் சாத கமாக ஆண்கள் எழுதுகின்ற நிலை உரு வாகும்.




படிப்பகம்

www.padippakam.com

# நிர்ப்பந்தம்

நேற்றிரவு
கொம்போறி மூர்க்கர்களும்
கழுதையர்களும்
காட்டெருமையர்களும்
என் கனவில் வந்தனர்.

கனவுக்குள்ளும்
என் கண்களுக்குள்ளும்
ஒளிந்திருந்த
என் உணர்வுகளையும்
விருப்புக்களையும்
பிடிங்கிக் கொண்டனர்.

நேற்றைய மனிதர்கள்
பச்சையாய் என் தசைகளைப்
பிசைந்து உண்டனர்.

இறந்து போன சடலங்கள்
எழுந்து வந்து
எனது மரணத்துக்காக
வேதம் ஓதின.

நான் நானாக
இல்லாது ஒழிக்கப்பட்டேன்

என் என்புகளும்
பற்களும் பேசிக் கொண்டன

கனவுக்குள் வர்ணங்கள்
சித்திரங்கள் கீறின
அவை உணர்வு கொண்டு
சீறி எழுந்தன

பேயாய் பிசாசாய்
நான் பிறக்குமாறு
நிர்பந்திக்கப்பட்டேன்.

**சுல்பிகா**


படிப்பகம்

www.padippakam.com

# அழகுராணி

- ராஜாத்தி -

"அழகுராணி செத்துப் போயிற்றாள்"
"ஆரு அழகுராணி"
"அவள்தான் அந்த பைத்தியக்காரி"
"அழகுராணி செத்துக் கிடக்காள்"
"எந்த அழகுராணி"
"அவள்தான் அந்த பிச்சைக்காரி"

"எப்பிடி"
"ஆத்தில் விழுந்து செத்துப் பொயிற்றாள்"
"ஏன் செத்தாள்" . . . . .

"அழகுராணி" அப்படித்தான் அவளை எல்லோரும் அழைப்பார்கள். அழுக்கு நிறைந்ததாய் ஒரு சட்டை உடுத்தி அதன்மேல் ஒரு சேலை சுற்றியிருப்பாள். அதுவும் அழுக்குத்தான். பல ஆண்டுகளாய் சீவிக்கட்டாத தலைமுடியை அழுக்கு நிறைந்த ஒரு சீலைத்துண்டால் கட்டியிருப்பாள். அவை மட்டும்தான் அவளது சொத்துக்கள்.

அண்டைக்கொருநாள் அவள் வந்தாள்
"அழகுராணி" . . . "அழகுராணி"
வீதியில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுவன் அழைத்தான்.

வந்ததே கோபம் அவளுக்கு . . .
கீழ கிடந்த கல்லை எடுத்து அந்தச் சிறுவன் மீது வீசினாள்.

"சனியன் . . . கோதாரி . . . ஹறாமுல புறந்தது . . .
உன்ட உம்மாவ கூப்புடன்டா களிசற" வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினாள். அழகுராணி என தன்னையாரும் அழைப்பதில் அவளுக்கு இஸ்ரமில்லை. கேலிக்குத்தான் அப்படி அழைக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

கேலியும் கிண்டலும் நிறைந்த வாழ்வுடன் போராடி வாழப்பழகிக் கொண்டாள் அவள்.
அவளை யாரும் அழகுராணி என அழைத்து ஆத்திரப்படுத்தாதவரை அவள் பைத்தியக்காரியல்ல. . .


படிப்பகம்

www.padippakam.com

அன்பானவள், வாழ்வை ரசிக்க ஆசைப்படுபவள், தனது கஸ்ரத்தை பிறருடன் பரிமாறிக்கொள்ள விரும்புபவள். ஆனால் எல்லோர் பார்வையிலும் அவள் ஒரு பைத்தியக்காரி. அவள் ஒரு பிச்சைக்காரி.

இடது கையை இறுகப்பொத்தியிருந்தாள். அதற்குள் அனேகமாக கொஞ்சம் சில்லறைக் காசியிருக்கும். மறுகையில் ஒரு பாண்துண்டு.

எவரையும் பொருட்படுத்தாமல் சேலையை தூக்கி கமுக்கட்டுக்குள் இடுக்கிக் கொண்டு பாணைக் கடித்தபடி வந்தாள். மழை பெய்யத் தொடங்கியது. ஆனால் அவள் அதை பொருட்படுத்தவில்லை.
எனது கேற்றில் தட்டினாள். "என்னெண்டாலும் தாங்க"

"அந்தச் சனியனுகள் இப்படித்தான் ஒரே தனகுறவனுகள் . . . அதுகளிட்ட நான் என்ன கேட்டேனோ தெரியா . . . வம்புக் குட்டியள் . . . இந்த அல்லாஹ் என்னத்தப் பாத்திற்றிருக்கானோ தெரியா . . . எனக்கு கெதியா மவுத்தத் தராம" தனக்குள் தானே மனவேதனைப்பட்டுக் கொண்டாள். "என்னெண்டாலும் தாங்க சுறுக்கா போகணும்"
"மீண்டும் கேற்றைத் தட்டினாள்"

"மழை தூறுது உள்ளே வா" அழைத்தேன், கேற்றைத் திறந்து வந்து தாவாரத்தில் நின்றாள் "தூவானம் அடிக்குது உள்ளே வந்து இரு" உள்ள இருக்க பயம் பாம்பு வரும் என்று சொல்லிக்கொண்டே படிக்கட்டில் இருந்து கொண்டாள். காதிடுக்கில் செருகியிருந்த பீடித் துண்டை எடுத்து வாயில் வைத்து புகைத்தாள். அவளுக்கு அதுவும் பழகிவிட்டது போல.

பாம்பு வருமா? ஏன்? நான் கேட்டேன்.
நான் எந்த ஊட்டையும் உள்ளுக்குள்ள போறல்ல பின்னால வந்து பாம்ப விடுறவனுகள். . .
"மழை வந்தாத்தான் கரைச்சல்" சாதாரணமாகவே சொன்னாள்.
"ஆரு உள்ளுக்கு பாம்ப விடுற"
"அங்க இருக்கானுகள் ரெண்டு மூன்று களிசறைகள் அவனுகள் தான்" அருவருத்துக்கொண்டே சொன்னாள்.
"ஏன் பாம்ப உள்ளுக்க விடுறவனுகள்"
"அவனுகளுக்கு பைத்தியம்" . . .
ஏன் உன்ர வீட்டுக்காரன் எங்க?
"அந்த நாய் உட்டுத்து பொயித்து . . . அதுகளெல்லாம் அது ஒரு ஆம்புளய"



படிப்பகம்

www.padippakam.com

"பிள்ளைகள் இல்லையா"?
ஒரு பொடியன் அவன எண்ட உம்மா வளக்காவு.
ஏன் விட்டுத்து போனவன்?

"உழைக்கப் போறல . . . எப்பயெண்டாலும் இருந்து போட்டுப் போய் கிடைக்கிறதில் கஞ்சா அடிச்சிப்போட்டு மோட்டப்பாத்துட்டு படுப்பான் . . . காசு கேட்டா அடிதான். . . எண்ட நகநட்டெல்லாம் வித்து திண்டு போட்டுத்தான் ஓடினவன்."

ஒரு நாள் எண்ட தலையில் கொதிதண்ணிய ஊத்தினவன். அதாலதான் எண்ட தலமயிரெல்லாம் கொட்டுப்பட்டுத்து இஞ்சே. . . தலையை குனிந்து காட்டினாள். அவள் தலைமயிரெல்லாம் கொட்டித்தான் இருந்தது.

புகைத்துக்கொண்டிருந்த பீடியை அணைத்து மீண்டும் காதில் செருகினாள். "என்னெண்டாலும் தாங்க போகணும்" கொடுத்ததை தனது கைக்குள் பொத்திக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். யார் சொன்னது இவளுக்கு பைத்தியம் என்டு. அவளுக்குள்ளதெல்லாம் வாழ்க்கை மீதுள்ள வெறுப்பாகவிருந்தாலும் வாழவேண்டும் என்கிற விருப்பு. அவளுக்குள் பொங்கியெழுகின்ற ஆசைகளையெல்லாம் அடித்து தணிக்கும் சமூகம் மீதான வெறுப்பு.

மழை கனத்தது. சேலைத்தலைப்பை தலையில் பிடித்துக் கொண்டு போனாள்.

"ஒரு சிறு கோடாய்"
"ஒரு புள்ளியாய்"
"ஈற்றில் மறைந்து போனாள்"

"அழகுராணி செத்துப் பொயிற்றாள்"
"ஆர் அந்த அழகுராணி"
"அவள்தான் அந்த பைத்தியக்காரி"
"அழகுராணி செத்துப் பொயிற்றாள்"
"எந்த அழகுராணி"
"அவள்தான் அந்த பிச்சைக்காரி"
ம். . . அழகுராணியைத்தான் எப்போதோ நாம் கொலைசெய்து விட்டோமே. . . பைத்தியக்காரர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக சென்ற பெண்கள் பற்றிய ஆய்வு.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்லும் பெண்களின் குடும்பங்கள் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அப்பிரச்சினைகளுக்கான காரணங்களை இனங்காண்பதற்கும், அதற்கான தீர்வுகளை முன்வைப்பதற்குமாக இவ் ஆய்வுத்தலைப்பு தெரிவு செய்யப்பட்டது. மேலும் இந்த ஆய்விற்கு குறிப்பிட்ட எல்லை வரையறுக்கப் படவில்லை. பிரச்சினைகளை - பத்திரிகை மூலமும், சமூகத்திலுள்ள நபர்கள் மூலமும் இனங்கண்டு குறிப்பிட்ட கிராமங்களில் மட்டுமே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வு நேர்காணல் மூலம் மேற்கொள் ளப்பட்டது. பின்வரும் கிராமங்களான நாவற்குடா, முறக்கொட்டாஞ்சேனை, மஞ்சந்தொடுவாய், குமாரபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள 10 குடும்பங்களில் இவ்வாய்வு நடாத்தப்பட்டது.

இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பெண்களாகவும் 20 தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ஆய்வு செய்யப்பட்ட 10 குடும்பங்களிலும் பெண்கள், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதற்கான காரணங்கள் பின்வருமாறு:**

1. வறுமை
2. பிள்ளைகளின் கல்வி
3. பிள்ளைகளின் எதிர்காலம்
4. பெண்களின் தலைமைத்துவம்
5. கணவன்மாரால் வாங்கப்பட்ட கடனை தீர்ப்பதற்கு
6. கணவனை இழந்தவர்கள்
7. போரால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள்
8. குடும்பச்சுமைகளால் மனம்பாதிக்கப்பட்டவர்கள்
9. சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்கு.

என்பன காரணங்களாக காணப்பட்டது. மேலும் வெளிநாட்டுப் பணிப்பெண்களாக செல்லுவதற்கு தூண்டப்பட்ட தொடர்பாடல்கள் பின்வருமாறு.

* தங்களுக்கு தெரிந்த பெண்கள் மூலம்
* ஆட்களை திரட்டும் உதவி முகவர்கள்
* ஏற்கனவே வெளிநாட்டு பணிப்பெண்களாக சென்றவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

* நேரடி முகவர்கள்
* சட்ட ரீதியான / சட்ட ரீதியற்ற முகவர்கள் மூலம்.

இவர்கள் மூலமாக பணிப்பெண்களாக சென்ற பெண்கள் தங்களது பிரயாணக் கட்டணங்களாக அல்லது வேறு கட்டணங்களாக வெவ்வேறு பட்ட பணத்தொகைகளை செலுத்தியுள்ளனர். அவை 7,000 , 13,000 , 15,000, 21,000 போன்ற தொகைகளாகும்.

இவ்வாறு மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக சென்றவர்கள் அங்கு வீட்டு உரிமையாளர்களால் பின்வரும் முறைகளில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

- வீட்டு உரிமையாளர்கள் புகைப்படங்களை கொண்டு வந்து கூட்டிச் செல்வர்.
- வினா கொடுத்து விடையளிப்பவர்களை கூட்டி செல்வர்.
- மொழி தெரிந்து ஏற்கனவே பணிப்பெண்களாக வந்தவர்கள் என்று அறிந்து கூட்டிச் செல்வர்.
- அவர்களது இனத்தவர்களை தெரிவு செய்தல்.
- அழகான திடகாத்திரமானவர்களை தெரிந்தெடுத்தல்.
- எதுவும் கேட்காது கூட்டிச் செல்வர்.
- தூதரகத்தால் நேரடியாக வீட்டுக்கு அனுப்புதல்.

**வெளிநாட்டுப் பணிப்பெண்களாக சென்றவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை பின்வருமாறு அறியக்கூடியதாக இருந்தது.**

நாவற்குடாவைச் சேர்ந்த ஒரு பெண் தனது பிரச்சினைகளை இவ்வாறு கூறினார். அவரது மகள் ஏற்கனவே இரண்டரை வருடங்கள் வெளிநாடு சென்று வந்தவர். மீண்டும் வீட்டின் நிலைமை காரணமாக வெளிநாடு சென்றார். அவர் போய் தற்போது 4 வருடங்களாகி விட்டது. இந்த காலங்களில் 6 தடவைகள் மாத்திரம் தொலைபேசியில் தொடர்புகள் செய்தார். ஆனால் ஒரு வருடகாலமாகியும் எந்தவித தொடர்பும் இல்லை என்று கூறினார் அவரது தாய்.

முறக்கொட்டாஞ்சேனை பெண் கருத்து தெரிவிக்கையில் அவர் வெளிநாடு சென்றதும் ஒழுங்கான நேரத்திற்கு சாப்பாடு கிடைப்பதில்லை. சம்பளம் குறைவு. இரவு பகல் பாராது வேலை. போன்ற பிரச்சினைகளை கூறினார்.

குமாரபுரப் பெண் கூறுகையில் ஓய்வில்லாத வேலை, மனக்கஷ்ரம், பாலியல் தொந்தரவு, விபசார விடுதிகளுக்கு அனுப்பப்பட்டமை போன்ற பிரச்சினைகளை கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

மஞ்சந்தொடுவாய் பெண் சொன்னார், மொழி கட்டாயம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பெண்கள் படிக்கவேண்டும். ஏனென்றால் அப்போதுதான் சரியாக வேலை செய்ய முடியும் என்று கூறினார்.

**இப்பெண்கள் வெளிநாடு சென்றதன் காரணமாக நாட்டில் இவர்கள் குடும்பங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் வருமாறு.**

* பிள்ளைகளைத் தனிமையில் பாதுகாவலர்களின் பராமரிப்பில் விட்டுச் சென்றதால் தாய் சேய் உறவு பாதிக்கப்பட்டது.
* கணவன், மனைவி உறவு பாதிக்கப்பட்டது.
* இதன் காரணமாக குடும்பத்தில் சந்தேகம், சண்டை, மன உளைச்சல் இன்னும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியது.
* கணவனின் தலைமைத்துவத்தை நம்பி குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் இழந்தமை.
* சமூகத்தால் ஒதுக்கப்பட்டு அவமானத்துக்குள்ளாக்கப்பட்டமை.
* தகாத உறவினால் ஏற்பட்ட கர்ப்பத்தினால் உளரீதியான தாக்கத்திற்குள்ளாதல், இதனால் அவரின் குடும்ப உறவுகளால் வன்முறைகளுக்குட்படுத்தப்படல்.
* குடும்பத் தேவைகளுக்காக அனுப்பப்பட்ட பணம் தீய செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

போன்ற பிரச்சினைகள் இப்பெண்களுக்கு ஏற்பட்டது.

**ஆய்வினை மேற்கொள்ளும் போது எமக்கு ஏற்பட்ட சிக்கல்கள்.**

* பெறப்படும் தகவல்களை வெளிப்படுத்திவிடுவோம் என்ற பயத்தினால் தகவல்களை திரட்ட முடியாமல் போனது.
* பணரீதியான எதிர்பார்ப்புகளோடு அவர்கள் இருந்ததால் வெறுமனே ஏனோ தானோ என்று சில தகவல்களை மாத்திரம் தந்ததால் முழுமையான விடயங்களைப் பெறமுடியாமல் இருந்தது.
* போதியளவு காலநேரமின்மையால் விரிவான தகவல்களை திரட்ட முடியாமல் போனது.



படிப்பகம்

www.padippakam.com

**சமூகப்பொறுப்பு வாய்ந்த அனைவரும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அல்லது தீர்வுகள்.**

* சட்டரீதியான முகவர்களை அறிமுகப்படுத்தி அவர்கள் சேவையை இவர்களுக்கு வழங்க வழி அமைத்தல்.

* வெளிநாட்டு பணிப்பெண்களுக்கான சட்ட வரைபுகள் உருவாக்கப் பட வேண்டும்.

* வெளிநாட்டு பணிப்பெண்களாக செல்லவிருக்கும் பெண்களுக்கு அவர்கள் தொழில் சார்ந்த அனைத்து அறிவுகளையும் முன்கூட் டியே அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். (சுகாதாரம், பாதுகாப்பு, குடும்பநலன், சேமிப்பு போன்றவை)

* குடும்பத்தில் கணவர்களுக்குரிய கடமை, பொறுப்பு, என்பன பற்றி சமூகத்தில் போதியளவு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

* சமூகத்தில் பெண்களின் உழைப்பின் முக்கியத்துவத்தை உரணப் படுத்தல் வேண்டும்.

* வெளிநாட்டிற்கு செல்லும் பெண்களுக்கு அங்கு ஏற்படும் நன்மை, தீமைகளை எடுத்து கூறுதல். மேலும் உள்நாட்டில் உள்ள வளங்க ளைக் கொண்டு தொழில் செய்வதற்கு வழிவகைகளை செய்து கொடுத்தல். இது சம்பந்தமாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி தொடர் புடைய நிறுவனங்களிடம் உதவிகளை பெற ஒழுங்குகள், ஆலோச னைகள் வழங்குதல்.




**ஆய்வாளர்கள்**
சி. ஜீவலதா
இ. அமுதா
செ. மல்லிகா
கு. பரமேஸ்வரி

**கலாசாரக் குழு**
**செயற்பாட்டாளர்கள்**



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்வு இதுவல்ல

மின்மினிப் பூச்சிகள்
மாநாட்டில்
சூரியக் கதிருக்கு
கண்டனக் கடிதம்
எழுதும் காலம்
இதுவான போது . . .

எங்கள்,
உள்ளத்தின் உணர்வுகள்
உதடுகளில் அப்படியே
உறைந்து கிடக்க
எங்கள் . . .
ஆத்மா நெருப்பில்
எரிந்து கொண்டே . . .

எங்கள் உணர்வுகள்
போர்க்கொடி தூக்கியது
சத்தம் போட்டுச் சென்றோம்
யுத்தத்தில் எம் உடல்
மௌனமாய்
செத்துக் கிடந்தது.


படிப்பகம்

www.padippakam.com

பலப் பல வருடம்
வெயிலில் போராடிய
எமக்கு
அறுந்த செருப்பும்
கிழிந்த குடையும்
போது மென்று
இன்று
வந்தவர்கள்
சொன்னார்கள்.

பெண்கள்
இருப்பும் வாழ்வும்
இது அல்ல
அது
என்றும் எமக்காய்
இருப்பதாகவே
உணர்ந்து கொண்டோம்.

இனி. . .
எம் பாதம்
ஆழப்
பதியட்டும். . .
இம் மண்ணும் மலையும்
புயலும் கடந்தே

விஜயலட்சுமி சேகர்



படிப்பகம்

www.padippakam.com

# அசதி



வீடு திரும்பி

பெருக்கிய போதும்

பாத்திரம் தேய்த்த போதும்

தோசை ஊற்றிய போதும்

பால் சூடாக்கிய போதும்

நினைத்துக் கொண்டே

தானிருந்தேன்

எழுதிவிட்டுத்தான்

படுக்க வேண்டுமென்று

இன்றும் வந்துவிட்டதெனக்கு

கவிதைக்கு முன்

“தூக்கம்” என்று பதிந்தேன்.

**கவிஞர் இளம்பிறை**

**நன்றி**
**“கணையாழி”**


படிப்பகம்

www.padippakam.com

# வெளவால்

நந்ததாஸ மூடியிருந்த போர்வைக்கு மேலால் மிக அதிகமான உயரங்களையும், எல்லைகளையும் துளாவித்துளர்வி விசாலித்துக் கொண் டிருந்தது அவன் மனது. தன்னை அந்த விசாலிப்பு வெளியெங்கும் கரைத்துத் தெளித்து எந்தத்தடயமும் இன்றி ஏதோ ஒன்று கணப்பொழுதில் அந்த விகாரவெளியில் கௌவிக்கொண்டது, அவனை.

நந்ததாஸவின் தலையை ஏதோ ஒன்று பாறாங்கல்லாய் அழுத்த திமிறித் திமிறி எழுந்து மீண்டும் போர்வையினால் இறுக்கமாக மூடிக்கொண்டான்: காற்றுக்கூட உள்ளே நுளைய முடியாமல் அந்த நூற்போர்வை தகர்ந்து அவனுள் உந்திக்கொண்ட மனதினை வெல்ல முடியாமல் திமிறினான். இருளே போதுமென்றிருந்தது.

மீண்டும் வெளி . . . இருள் மங்கியது. மெல்ல மெல்ல கசிந்த ஒளியில் புதிது புதிதாக அவனுக்கு மிகப்பழக்கமான எல்லாம் எழுந்தது. வரிசை குன்றா தடுத்தடிக்கப்பட்ட ஆளுயுர வேலிகள், மண்மூட்டைகள், சிலரின் இருப்பையே இல்லாதொழித்த பதுங்குகுழிகள், பச்சைபச்சையாய் உள்ளாடைகளோடு தொங்கும் கொடிகள், அறைந்து சாத்திய கதவுகளைப் போன்று காவலில் உள்ள படைச்சகாக்கள், மாலை வேளையில் மைதா னத்தில் இருந்து எழும் கரவொலிகள், கிரிக்கட் ஆடும் சத்தங்கள், கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதோடு, சுட்டுக்கொண்டே இருக்கத் தூண்டும் வேட்டொலிகள், இன்னும் இன்னும் . . . அவனுள் ஊறி, அவனைத் திசைதிருப்பி, அவனை அவனல்லாததாக்கிய அனைத்தும் மிகுந்தநட்போடு அந்த கசிவொளியில் அவனுள் எழுந்தது. அவன் பழக நேர்ந்த புதிய உலகம் அது.

நந்ததாஸ அவனுள் விரிந்த அந்த மைதானத்தில் ஓடத் தொடங் கினான். மிகுந்த இதம் பரப்பிய மாலைவேளை. நண்பன் கருணாரத்ன, பஷீர் தோளோடு தோள் உரசி, கட்டை கால்சட்டைகளின் கீழே சிலிர்த்த உரோமக் காட்டோடு உரசிச்சிரித்து உரசிச் சிரித்து ஓடிக்கொண்டிருந் தார்கள். அந்த வயலைத்தாண்டி இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு அறுவடையாகாமல் குலைமுற்றி, முற்றிய கதிரில் இருந்து மீண்டும் முளை கள் எழுந்து குலைகளின் மீது பயிர் எழுந்து மறுபடியும் மறுபடியும்



படிப்பகம்

www.padippakam.com

பலதட்டுக்களாய் நெற்பயிர்கள் மரங்களாய் வளர்ந்து நின்று வழி அடைத்தன. ஆயினும் அந்த ஆலமரவேரின் இடது புறத்தில் நெல்மரங்கள் இல்லை. உழைக்கி அழித்து சாய்த்து விட்ட கதிரில் ஆடோ மாடோ மேய்ந்து விட்ட அடிக்கட்டை பொருக்குகளோடு நின்றிருந்தது.

நந்ததாஸ, கருணாரத்னாவை பஷீரை தொடர்ந்து ஆலமரத்தின் இடதுபுறம் கடக்க ஓடினான். ஆனால் அவனுள் பேரதிர்வும் பயமும் விகாரமாய் அவனது ஓட்டத்தில் ஆட்டத்தை கொடுத்தது. பேய்களைப் பற்றிய கொடுமையான, விகாரமான கற்பனையில் மயானத்தைக் கடக்கவிரும்பும் சிறுபிள்ளைபோல் கடந்து ஓடி, மிக அதீதமான தொலைவில் மறைந்து ஒளிந்துகொள்ள விளைந்தான். ஆனாலும், புராணக் கதைகளின் கற்பனை போல் நந்ததாஸவினால் ஓடமுடியவில்லை. மீண்டும் மீண்டும் கடந்த இடத்திலேயே கால்கள் கிடந்தன. ஆனால் அவன் ஓடிக்கொண்டுதானிருந்தான்.

முட்கள் பாய்ந்த சப்பாத்துகளின் பின்புறம் தகர்ந்து, முழங்காலின் கீழ்பகுதி கழன்று வீழ்கிறது. நந்ததாஸவின் நண்பர்கள் அத்திலாந்திச் சமுத்திரத்தைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். நந்ததாஸவின் கால்கள் மட்டும் ஆடிக்கொண்டிருந்தது. அவன் மீண்டும் மீண்டும் மிதித்த பாதத்தினால் பெருங்குழியெழுந்தது. இப்பொழுது ஆலமரம், நெல்மரம் எல்லாம் குழியின் மேல் பெருவிருட்சமாய் நிமிர்ந்து விரிந்தன. எல்லாம் மேலே தொங்கிக் கொண்டிருப்பது போலிருந்தது நந்ததாஸவிற்கு.

திடீரென குழியினுள் இருள்படர்ந்து நிழலாய் ஏதோஒன்று கவிழ்ந்தது. பின் சிவப்பு ஒளி கசிந்தது. ஒளிக்கோர்வை இளஞ்சிவப்பும், வெள்ளைப் பூக்களும் நிறைந்த புடவையாகி மெல்ல மெல்ல அவளை சிறிதுநேரத்தில் அவளாகவே, மாறி நந்ததாஸவின் மேல் முளைத்திருந்த மரங்களின் உச்சியில் நின்று பயங்கரமாய் சிரிப்பதும், குழிக்குள் ஓடிக்கொண்டிருக்கும் நந்ததாஸவை நோக்கி கண்டங்களுக்கு மேல் நீளும் கூரிய நகம்கொண்ட கைகளால் துளாவி நந்ததாஸவினை நசிக்கத் தொடங்கினாள். நந்ததாஸ அலறினான். அலறினான்.

"என்னைவிடு . . . என்னை விடடி. . . பஷீர் . . . பஷீர் என்னைக் காப்பாத்து பஷீர் . . ."

வைத்தியசாலையின் 21ம் வார்ட்டில், போர்வை உதறி உயரம்


படிப்பகம்

www.padippakam.com

பள்ளம் பேதமற்று கால்கள் கட்டிலிலும், தரையிலும் சமமற்றுத்தாவின. கதவில் மோதி ஓடினான். பாதிவழிக்கு போர்வை சிக்கி இழுபட்டது. எதிரே வந்த தாதியின் இடதுகை முறித்து நந்ததாஸ ஓடினான்.

"பிடியுங்கோ, ஆளைக்கட்டுங்கோ" மருத்துவமனையின் பக்கவாட்டு அறைகளில் இருந்து மனநலமருத்துவரின் ஆணைகள் பறந்தன. ஆனாலும் அவன் அவரின் அறையைக் கடந்து வெகுநேரமாயிற்று. நந்ததாஸவைக் கைப்பற்றும் முயற்சியில் மருத்துவமனையின் உள்ளக வட்டாரங்கள் மிகுந்த உஷாராகின.

நந்ததாஸ எல்லையற்ற குழியிலிருந்து, மிகுந்த ஆழத்திலிருந்து ஒரே எத்தனத்தில் அவளின் தாக்குதலை புறக்கணிக்கும் வெறியில் ஓடிக் கொண்டிருந்தான். மூன்றாண்டுகளுக்கு முன் பிரிந்துவிட்ட நண்பர்கள் பஷீரும் கருணாரத்தினவும் தன்னை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது அவனுக்கு.

சற்றும் எதிர்பாராத அதிர்வில் 21ம் வார்ட்டின் வாயிற்கதவில் பேயறைந்து நின்றிருந்தாள் ஹேமலதா. பெருங்கனவுகளோடு தொடங்கிய புத்தம்புது வாழ்க்கை இது. அவள் கனவிலும் எதிர்பாராதது. நந்ததாஸ தன் போர் அனுபவங்களில், இடைநடுவே மாட்டிக்கொண்ட எத்தனையோ பேரைச் சுட்டிருக்கின்றான். அவர்களில் சிலரது உடல்களை மிகுந்த வெறித்தனத்தோடு வெற்றிக்களிப்பில் பூட்ஸ் கால்களால் நசித்து உறுதி செய்த பின் மீண்டும் மீண்டும் சுட்டிருக்கிறான். ஓட்டைகள் இட்டு ரசித்திருக்கிறான். அத்தகைய உடல்களில் ஒன்றாய் சார்த்தப்பட்டு நின்றுகொண்டிருந்தாள் ஹேமலதா!

குருநாகலையின் பிகிம்புவ கிராமத்தில் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்து இளமைகுன்றாதிருப்பதையும், அந்த இளமையின் குருட்டுத்தனத்தை பேரறிவென்றும் அறிந்து கொண்டவள் ஹேமலதா. காலைத்தொடும் கூந்தலும், பின்னிப்பின்னிச் சிக்கும் கண்களும், நீரோடைகள் நனைத்து நனைத்து சுத்திகரித்த எலுமிச்சைக் கால்களும் வாழ்வின் பெருங்கொடை என எண்ணியவள்.

வாழ்வில் மிகக்கரிய இருள்படர்ந்த தெருக்களில் மின்கம்பங்களின் தனிமையை, வேதனையை சந்திக்க நேரும் என்றோ அதனை எதிர் கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளவோ, தாங்கிப்பிடிக்கவோ கருநிறக் கூந்தல்களால், வாழைக்கால்களால் பின்னிய கண்களால் முடியாது போகும் என அவள் எண்ணியிருக்கவில்லை.

தன்னைச் சுற்றித்திரிந்த பிகிம்புவ கிராமத்தின் துடிப்பான இளைஞர் களின் வசீகரமோ, அன்புக்கட்டளைகளோ அவளைக் கலைக்கவில்லை. அவளை கலைப்பவன் நந்ததாஸ ஒருவன்.

பிகிம்புவவின், பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டிற்குச் செல்லும் வழியின் பஸ்தரிப்பிடத்தில் நந்ததாஸ ஹேமலதாவினுள் வீழ்ந் தான். பெண்பார்த்து, பேசி, உறுதிசெய்து, இடையிடையே சிறிது கதைத்துப் பேசி, கொஞ்சம் காதலித்து, திருமணமாகி வரும் வரையிலும்
அவன் மிகச்சரியான தெரிவாக,
மிகச் சரியான இறைவனின் கொடையாக,
அவளுக்குத் தோன்றினான்.

நந்ததாஸ மிகச் சரியாய் இருப்பதுபோல்தான் அவனுக்குகூட தோன்றினான். அவனுள் டைனோசரஸ் கூடுகளின் மிகப்பெரும் வரலாற் றைப் போன்றோ, அவற்றினது பிரமாண்டமான அச்சுறுத்தும் வளர்ச்சி குறித்தது போன்றதோர், இன்னொரு நந்ததாஸ கண்டு பிடிக்கப்படாம லிருந்தான்.

முதலிரவன்றே அவனை அவளும், அவனை அவனும் கண்டுபிடிக்க நேரம் விதித்தது விதி. திடீரென மௌனம் கவிழ்ந்து தனக்கு கெட்டகெட்ட கனவுகள் வருவதாய் ஜாமத்தில் அவளை உலுப்பி எழுப்பினான். “லதா எனக்குப் பயமாய் உள்ளது. மேலெல்லாம் யாரோ பிராண்டுவது போலிருக்கிறது. அப்பாவை எழுப்பு. அம்மாவைக் கூப்பிடு. விளக்கைஎடு, நீ வெளிய போ”

ஆணைகள் இட்டான். வீரிட்டுக் கத்தினான். இப்படித்தான் ஒருநாள், கிழக்கின் வயல்வெளி ஒன்றில் குரல் பிசிறி, அபயம் தேடி ஒரு குரல், சங்கரியின் குரல் ஒலித்து அடங்கியது. பனை வடலிகளை நீவி எழும் அந்தக் காலைக் காட்சியின் அழகினை ரசித்து ரசித்து அதன் யௌவனத் திற்கு ஓர் கறைக்கோட்டினை வரைந்தவன் அவன்.

சிவப்பில் பூக்கள் நிறைந்ததும் அவனுள் தற்போதுவரை



படிப்பகம்

www.padippakam.com

நிறக்கோடுகளாய் எழுந்து, பின்னர் கசிந்து கசிந்து அவன் பயந்து ஓடுகின்ற அளவிற்கு உருமாறும் அதே சங்கரி. 4 பிள்ளைகளின் தாய். அன்பான மனைவி. சாதாரண குடும்பத்தின் அதீதமான கனவுகளோடு கட்டிய கூட்டில் வாழமுற் பட்ட வேளை, செங்கல் செங்கல்லாக பிடுங்கி எறியப்பட்ட வலிசுமந்து, துயர் சுமந்து, அந்த மண்வாசனையை தாய் மண்ணின் பிரிவை உள்ளடக்கி உணர்வுகள் உருக உருக இடம்பெயர்ந்து சென்றபோது, இதுதான் வாழ்வின் பேரிழப்பென்று எண்ணினாள். ஆயினும் இதனைவிட, பெருந்துயரை, பெருவலியை காவியபடி, அலையும் ஆவியாய் தன்னை மாற்ற நேரும் என அவள் எண்ணியிருக்கவில்லை.

பகலும் இரவும் கலக்கும் அந்தியொன்றில், வயலில் இருந்து திரும்பிக்கொண்டிருந்தாள். வியர்வையும், இனவெறியும் இணைந்து வேரறுக்கும் கூரிய நகங்களும், விறைத்து எழுந்த நான்கு ஆண்குறிகள் இடைமறித்து - அவள் அடிவயிற்றை துளையிட்டன.
சங்கரியை - சங்கரித்தன.

மணிகள் நிறைந்து பாரம்தாங்காமல் தலைகவிழ்ந்திருந்த நெல் வயல்வெளியில் ஆத்மா உருவப்பட்ட நிலையில் வானை வெறித்துக் கிடந்தாள் சங்கரி.

மேலே கூடுதிரும்பிக் கொண்டிருந்த பறவைகளின் ஒலிகள் கூட அவளைக் கடக்கையில், தமக்குள் உறைந்து பறந்தன. அவற்றுக்குச் செட்டைகள் இருந்தன.

அவளைச் சங்கரித்த வெற்றிக்களிப்பில் ஆடைகள் சரிசெய்து நடந்தவர்களில் நந்ததாஸவும் ஒருவன்.

உணர்வுகள் இழந்து நா காய பின்னிப் பின்னிச் செத்த நினைவுகளோடு, கூடுதிரும்பிய பறவைகளின் பின்னே திசைகள் தேடிப் பறந்தது அவளின் உயிர். காயங்களிலிருந்து வடிந்த குருதித்துளிகள் கூட, அவளின் தாயல்லா மண்ணில், கொடியவர்களைச் சபிக்க நாதியற்று இயலாமையோடு மெல்ல மெல்லக் கசிந்தது அந்த செம்மண்ணில்.

இன்றைப்போல் நந்ததாஸவின் திருமணவீட்டின் குதூகலம் அழித்து, மயானத்தை பிரதியெடுத்து நிற்பதுபோல் இன்றுவரை 3 வருடங்களாக


படிப்பகம்

www.padippakam.com

4 குழந்தைகளும் இதேவலியை, இதே துயரை, இதே அதிர்வை இன்று வரை சுமந்து வருகின்றார்கள்.

இந்த மௌனப்போரை கலைக்க இயலவில்லை. நந்ததாஸவின் வீட்டுச்சுவரில், அவன் மனைவி ஹேமலதாவின் முகத்தில் இன்று படர்ந்து படர்ந்து மூடுகிறது.

நந்ததாஸவை கைப்பற்ற முடியாமல் மருத்துவமனையின் ஊழியர் கள் திணறினர். உள்ளரங்க மதிலின் சுவர் 6 அடிகளையும் தாண்டியது. தான் சங்கரியின் அந்த விகாரமான விரல்களுக்கிடையில், அவளின் கடவாய்களில் இருந்து வெளித்தள்ளியதாகத் தோன்றும் கோரப்பற் தந்தங்களின் இடையில் தான் இனி சிக்கிஅழியும், பயத்தின் உச்சத்தை எண்ணி நந்தாஸ ஆடைகள் நழுவ மதிலினை ஒரே எத்தனத்தில் தாவும் முனைப்பில் பாய்ந்தான்.

பசிய புற்தரைகளும், அருகே அதனைக்கேலி செய்யும்படி சீமெந்து வாய்க்காலில் ஓடிக்கொண்டிருந்த சாக்கடை நீரும், அதிலே மிதந்து அமிழும் சிவப்பு. மஞ்சள் கலந்த பஞ்சுத்துண்டங்களும், இறப்பர் போத்தல் குப்பிகளும், அதன் வாடையும், வைத்தியசாலைக்கேயுரிய அந்த நெடியில் தலை சிதறிக் கிடந்தான் நந்ததாஸ.

அவனுள் இப்போது மைதானமும், அதனை அண்டிய வயல்வெளி யும், அவன் ஓடும் குழிகளும், அவனைப் பின்தொடர்ந்து விரட்டும் சங்கரியின் விகாரமும் இல்லை.

3 வருடங்களும் இல்லை. அவன் இப்போது நந்ததாஸ இல்லை. முன்னைய விறைப்பும் துடிப்பும் அடங்கின. மருத்துவமனையின் ஊழியர்கள் 'ஸ்ரெச்சரில்' வைத்துத்தள்ளி, நந்ததாஸவின் பிரேதத்தை நகர்த்தினர்.

அவனது புதுவாழ்வின் ஒவ்வொரு இரவையும் பகலாக்கி, ஒவ் வொரு பகலையும் இரவாக்கிய சங்கரியும் இப்போது இல்லை. அவனுடன் 21ம் வார்ட்டிலிருந்து பெரும் ஒப்பாரி எழுந்தது. 3 வருடங்களுக்கு முன் கிழக்கின் கிராமமொன்றிலிருந்து எழுந்த அதே ஒப்பாரி. எல்லா இருதயங் களையும் பிளிந்து சாறு எடுத்த ஒப்பாரி. நந்ததாஸவின் குடும்பத்தின ரிடமிருந்து எழுந்தது.



படிப்பகம்

www.padippakam.com

"அவனுக்கு என்ன நடந்தது"? எல்லா முகங்களிலும் கேள்வி அறையப்பட்டிருந்தது. 3 வருடங்களுக்கு முன் சங்கரியின் பிணத்தருகே நின்று அவள் குடும்பமும் இதேபோல் கேட்ட கேள்வி அது.

கிழக்கின் துறையூர் கிராமத்தின் இந்து மயானத்தில் அவளைப் புதைத்த இடத்தில் எருக்கலம் செடிகள் பூத்துக்குலுங்கின.

**T. உருத்திரா.**



ஓவியம் : **S.N. வாசன்**



படிப்பகம்

www.padippakam.com

# வீட்டு வன்முறை அல்லது வீட்டிம்சை சட்டவரைபுகள் பற்றிய நோக்கும், நடைமுறைச் சிக்கல்களும்.

மங்களா
சட்டத்தரணி

வீட்டுவன்முறை அல்லது வீட்டிம்சையானது சமூகத்தின் சகல மட்டங்களிலும் காணப்படுகின்றது. அவை குடும்பப் பிணக்கு, தனிப்பட்ட விடயம், உள்வீட்டு விவகாரம் எனக் கூறப்பட்டு சட்ட அமுலாக்கல் பிரிவினராலும், நீதித்துறையாலும், ஏன் முழு சமூகத்தாலுமே புறத்தொதுக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. வீட்டுவன்முறை அல்லது வீட்டிம்சையால் பாதிக்கப்படுவோரின் உடல், உள பாதிப்பு, தொடர்ந்திருக்கும் மன உழைச்சல், பொருளாதார கஷ்டம் என்பன பற்றி யாரும் கருத்திற்கொள்வதாக இல்லை. இதனாலேயே வீட்டுவன்முறையைக் கையாள்வதற்கான சட்டமொன்றின் தேவை உணரப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை 1978ம் ஆண்டின் அரசியலமைப்பானது சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்து சர்வதேசச் சட்டங்களுக்கும், உடன்படிக்கை நியதிகளுக்கும் மதிப்பளித்தலைக் கோருகிறது. மேலும் பெண்களுக்கெதிரான சகல வழிகளிலுமான பாரபட்சத்தை இல்லாதொழிக்கும் பட்டயம், சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் என்பவற்றை அங்கீகரித்துள்ளதுடன் பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாதொழிக்கும் பிரகடனத்திலும் கைச்சாத்திட்டுள்ளது. அவ்வாறாயின் இலங்கை அரசானது சர்வதேச சட்டத்தராதரத்திற்கு ஏற்ப சட்டவாக்கத்தை பேணவேண்டிய கட்டுப்பாடுடையதாகின்றது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்களைப் பொறுத்தவரை வீட்டிம்சைகளை அல்லது வீட்டு வன்முறைகளை கையாள்வதற்கான விசேட சட்ட ஏற்பாடு எதுவுமில்லை. எனினும் தாக்குதல், அடித்தல், உடலுறுப்பைச் செயலிழக்கச் செய்தல் போன்ற குற்றங்களின் போது "இலங்கை தண்டனைச் சட்டக்கோவையும் (Ceylon Penal Code) சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல், பாலியல் துஸ்பிரயோகம் போன்ற குற்றங்களின் போது இலங்கை தண்டனை சட்டக்கோவையின் திருத்தச் சட்டம் 1995 (Penal Code Amendment Act of 1995) போன்ற சட்டங்களும் பயன்படுத்தப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

எனினும், வீட்டுவன்முறையால் பாதிக்கப்பட்ட திறத்தவர் அனேக மாக கோரும் நிவாரணத் தாபரிப்பு விவாகரத்து ஆகும். பாதிக்கப்பட்ட வர்கள், (சிறுவர்கள் உட்பட) எதிராளியின் கொடுமையான நடத்தை யினால் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவராக அல்லது வெளியேறி யவராக இருப்பார்.

**சம்பவம் I**

5 பிள்ளைகளின் தாய் கணவன் ஒரு கூலித்தொழிலாளி. தினமும் மது அருந்திவிட்டு மனைவியைத் தாக்குதல் வழக்கம். இத்தாக்குதலால் மனைவி செவிப்புலனை இழந்துவிட்டார்.

பொலிசாரும் குடும்பப்பிணக்கு என்பதால் ஒற்றுமையாகும்படி அறிவுறுத்தினர். அப்பெண்ணுக்கு தொடர்ந்தும் அந்நபருடன் சேர்ந்து வாழுதல் விருப்பமில்லை என்பதால் தாபரிப்பு வழக்கு தொடர்ந்தார். ஆயினும், நீதிமன்றமும் குடும்ப ஆலோசகரிடம் அனுப்பியும், தாபரிப்பு செலுத்த தனக்கு வருமானமில்லை என இழுத்தடித்தார். மீண்டும் அதே வன்முறையாளனான கணவனுடன் சேர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டாள்".

இங்கு குறித்த பெண் தனது செவிப்புலனை இழந்த போதிலும் கணவன் என்ற காரணத்தால், குற்றவாளிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படாது குற்றவாளி தப்பித்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தைக் காணலாம்.

**சம்பவம் 2**

கணவன் ஒரு மேசன். தனது பாலியல் இச்சையை நினைத்தவுடன் நிறைவேற்ற மனைவி மறுக்கும் பட்சத்தில் அடித்துத் துன்புறுத்தப்பட்டார். தனது 16 வயது, 14 வயது நிரம்பிய இரண்டு பெண் பிள்ளைகளையும் மிகமோசமான முறையில் அடித்து துன்புறுத்தியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிறுமிகளுக்கு அடிகாயங்கள் பல இருந்தபோதிலும் தந்தையுடன் அதே வீட்டிற்கு போக முடியாதென மறுத்த போதிலும் பொலிசார் சமா தானமாகப் போகும்படி கூறினர். குறித்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அடுத்ததாக விவாகரத்து பெறுவதாயின் இலங்கைச் சட்டத்தில் வழக்காளி பின்வரும் மூன்று திருமணக் குற்றங்களைக் காரணங் காட்டியே பெறலாம். பிரதிவாதியானவர் :-



படிப்பகம்

www.padippakam.com

1. வன்ம உறவறுத்து சென்றுள்ளார். (Malicius desertion)

2. மலட்டுத்தன்மையானவர் (Imporancey)

3. சோரக்குற்றம் (Adultery) போன்றவை அடிப்படையில் ஏதாவதொன்றைக் காரணங்காட்டியே பெறலாம். ஆனால் விருப்புக்கு மாறான உடலுறவு, பாலியல் தொல்லைகள் போன்றவை விவாகரத்துக் கான காரணமாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் நீதிமன்றத்தால் சட்டரீதியாகப் பிரிந்திருக்குமாறு (Judicial Seperation) கட்டளையிடப்பட் டுள்ள காலத்தில் வலிந்து உடலுறவு கொள்ளுவாராயின் மட்டுமே திருமணத்தின் போதான பாலியல் வல்லுறவு (Merital rape) ஆகக் கருதப்படும்.

**சம்பவம் 3**

கணவனின் அதீத பாலியல் இச்சை காரணமாக தினமும் துன்பத் திற்குள்ளான மனைவி திருமண இல்லத்திலிருந்து வெளியேறி பெற்றோ ருடனும் தனது 4 வயது மகனுடனும் வசித்து வந்தார். அப்பெண்ணைத் தன்பக்கம் எடுப்பதற்காக கணவன் 4 வயது மகனை கடத்தி சென்றார். இங்கு மனைவியால் விவாகரத்து கோரப்பட்டதுடன் சிறுவனின் பாதுகாவல் தனக்கு வேண்டுமெனவும் கோரினார். இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு நீதிமன்றில் வழக்கு 9 - 10 மாதங்களுக்கு விசாரிக்கப்பட்டது. நீதிமன்றம் மிகுந்த பிரயத்தனத்திற்கு மத்தியில் பிள்ளையின் பாதுகாவலை தாயிடம் வழங்கியது. எனினும், விவாகரத்து பற்றிய தீர்மானத்திற்கு இன்னும் வரவில்லை.

**சம்பவம் 4**

கணவன் மது அருந்திவிட்டு மனைவியுடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் போது விலக்குப் பிடிக்க சென்ற மாமியாரை அடித்து கையை உடைத்திருந்தார். பாரதூரமான காயம் விளைவித்திருந்தமைக் காக குற்றஞ்சாட்டி பொலிசார் வழக்கு தொடுத்திருந்த போதிலும், குடும் பத்திற்குள் பிரச்சினை ஏற்படும் என்பதால் வழக்கை வாபஸ்பெற்றார்.

மேற்குறித்த வழக்கு சம்பவங்கள் குடும்ப பிணக்கு என்கின்ற கார ணத்தால் குற்றவாளியை தப்பிக்க வைக்கும் வழிமுறையாக காணப் பட்டதைக் காணலாம்.

இது இவ்வாறிருக்க தொடர்ந்து பெண்களுடனும், பெண்கள் அமைப் புக்களுடனும் பெற்ற அனுபவத்தில் கொழும்பு பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினரால் வீட்டுவன்முறைக்கு எதிரான சட்டவரைபு தயாரிக் கப்பட்டது. இதற்கு இலங்கையில் பல்வேறு மட்டங்களிலும் பெண்களுடன் வேலை செய்யும் பெண்கள் அமைப்புக்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள்



படிப்பகம்

www.padippakam.com

போன்றவற்றின் கருத்துக்களும் பெறப்பட்டது. கடந்த 22 மார்ச் 2001ல் வீட்டிம்சை சட்டம் / வீட்டு வன்முறைச் சட்டம் (Domestic Violence Act) ஒன்றின் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டவரைபு ஒரு சட்டமூலமாக வருவதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் நோக்கம் இச்சட்டவரைபு சட்டமாக்கப்பட வேண்டும் என்பதே.

ஆயினும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசும் 2002இல் "வீட்டுவன்முறைச் சட்டம்" (Domestic Violence Act) எனும் சட்டவரைபினை ஆக்கியுள்ளது. இவ் வரைபிலும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டோர், இடைக்கால பாதுகாப்பு கட்டளை, பாதுகாப்புக்கட்டளை (Interim order/ protection order) பெறுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேற்குறித்த இரு சட்ட வரைபுகளுக்கிடையே சில தெளிவின்மைகளும், ஐயப்பாடுகளும் காணப்படுகின்றன. பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினரால் தயாரிக்கப்பட்ட சட்டவரைபு சற்றுப் பரந்துபட்டதாகவும் விளக்கம் கூடியதாகவும் உள்ளது. எனினும் சில விடயங்கள் நடைமுறைச் சாத்தியமானதா? என்ற வினாவும் எழுகின்றது. அரசினால் தயாரிக்கப்பட்ட சட்டவரைபில் எவை வீட்டுவன்முறை யாரால் புரியப்படலாம் என்பன பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றது.

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினரால் தயாரிக்கப்பட்ட வீட்டு வன்முறை சட்டவரைபில் எவை வீட்டிம்சை என்பதற்கு பின்வருமாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அ) சரீர துஸ்பிரயோகம்
ஆ) பாலியல் துஸ்பிரயோகம்
இ) வாய்மூல உளவியல் துஸ்பிரயோகம்
ஈ) பொருளாதார துஸ்பிரயோகம்
உ) அச்சுறுத்தல்
ஊ) தொந்தரவு செய்தல்
எ) பதுங்குதல் / வசீகரித்தல்
ஏ) சொத்துக்களுக்கு தீங்கேற்படுத்தல்
ஐ) திருமண இல்லமல்லாத மனுதாரர் வசிக்குமிடத்திற்கு செல்லுதல்.
ஒ) மனுதாரரின் குடும்ப உறுப்பினர் / நண்பர் / சமூகசேவையாளர் / மருத்துவருக்கு எதிரான குற்றம்.
ஓ) குடும்பத்துக்கோ, உறவினருக்கோ, நண்பருக்கோ ஆன தொடர்பு சேவைகளை தடுத்தல்.



படிப்பகம்

www.padippakam.com

ஔ) மனுதாரரின் பாதுகாப்பு நல்வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தும் அடக்கு முறை என்பன காட்டப்பட்டுள்ளது.

மேலும், யார் வழக்கு தொடரலாம் என்பது தொடர்பில்.

அ) சட்டப்படி / வழக்கப்படி / மதரீதியாக மணம் செய்தவர்
ஆ) திருமண உறவுபோல் சேர்ந்து வாழ்பவர்
இ) பிள்ளையின் பெற்றோர் / பெற்றோர் உரிமை கோரக்கூடியவர்.
ஈ) குடும்ப உறுப்பினர்
உ) கூட்டுக் குடும்பம்
ஊ) காதலர்கள் பாலியல் உறவுடன் கூடியதான நிச்சயிக்கப்பட்டு, சந்தித்துக் கொண்டு வழக்கப்படியான உறவிலிருத்தல்.
எ) ஒரே இடத்தில் வசிப்பவராக இருத்தல்.

யார் பாதுகாப்பு கட்டளைக்காக (Protection order) விண்ணப்பிக்கலாம் என்பது தொடர்பில் அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைபில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் எழுத்துமூல மனுவை சமர்ப்பித்து கோரலாம். மனுதாரர் சிறுவராயின் அச்சிறுவர் வசிக்கும் வீட்டு நபர், பெற்றார் / பாதுகாவலர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்ட நபர் பொலிஸ் உத்தியோகத்தர் என குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு தயாரித்துள்ள சட்டவரைபில் மேலதிகமாக எழுத்துமூல சம்மதம் பெறதேவையற்றோராக பின்வருவோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். மனநிலை பாதிக்கப்பட்டவர், உணர்வற்ற நிலையிலுள்ளோர், தேவையான சம்மதம் வழங்க இயலாதென நீதிமன்றம் திருப்திப்படும் நபர் என்போரும் மனுதாரர் சார்பாக ஆலோசகர் சமூகசேவையாளர் மருத்துவம் நிறுவனம் / குழு அல்லது மனுதாரரின் நலனில் அக்கறையுள்ள எவரும் விண்ணப்பம் செய்யலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் மேற்குறித்த விடயம் இலங்கைச் சட்ட ஏற்பாடுகளில் புதியதாகவும் முன்னேற்றகரமாகவும் செய்யப்பட்டுள்ள ஒன்றாகும். பொதுவாக இலங்கைச் சட்டத்தைப் பொறுத்து பாதிக்கப்பட்டவர், அல்லது அவர் சார்பான சட்டத்தரணியே வழக்குத் தொடரலாம்.

மேலும் இடைக்காலப் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் இரண்டு சட்ட வரைபுகளிலும் வீட்டுவன்முறையால் ஒருவர் பாதிப்படைந்துள்ளார் அல்லது பாதிப்படைவார் என கருதுமிடத்து இடைக்காலப் பாதுகாப்பு கட்டளையை வழங்கலாம் எனவும் இக்கட்டளை வழங்கப்பட்டு இரண்டு வார காலத்துள் பிரதிவாதி தனக்கெதிராக ஏன் பாதுகாப்பு கட்டளை வழங்ககூடாது என காட்டவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# இரு சட்டவரைபுகளுக்கிடையேயும் பொதுவாக காணப்படும் இயல்புகள்

### யார் பாதுகாப்புக் கட்டளைக் கான விண்ணப்பம் செய்யலாம்?

பெண்கள் தொடர்பூடக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்ட சட்டவரைபு

**பிரிவு 5:**

1. எந்த ஒரு மனுதாரரும்
2. மனுதாரர் சார்பாக ஆலோசகர் சமூகசேவையாளர், மருத்துவர், நிறுவனம் / குழு அல்லது மனுதாரரின் நலனில் அக்கறையுள்ள எவரும்.

எழுத்து மூல சம்மதமின்றிய மனு:

அ) பராயமடையாதவர்.
ஆ) மனநிலை பாதிக்கப்பட்டவர்.
இ உணர்வற்ற நிலையிலுள்ளோர்
ஈ) தேவையான சம்மதம் வழங்க இயலாதென நீதி மன்றம் திருப்திப்படும் நபர்.

அரசினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைபு

**பிரிவு : 2**

a) எந்த ஒரு மனுதாரரும்.
b) மனுதாரர் சிறுவர் ஆயின் :
1. சிறுவர் வசிக்கும் வீட்டுநபர் பெற்றார் / பாதுகாவலர்.
2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்ட நபர்.

c) பொலிஸ் உத்தியோகத்தர்.

### நீதிமன்ற நியாயாதிக்கம்

நீதவான் நீதிமன்றம்

பிரிவு 2(3) பாதிக்கப்பட்டவர் மற்றயவர் வசிக்கும்/ வீட்டுவன் முறை நிகழ்ந்த இடத்து நீதவான் நீதிமன்றம்.

### இடைக்காலப் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு கட்டளை வழங்கல்.

**b**

இடைக்கால்ப் பாதுகாப்பு ஆணை விண்ணப்பித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்கு மேற்படாததாக அமைய வேண்டும்.

பாதுகாப்பு கட்டளை வழங்குவதற்கான அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

**குற்றத்தை எண்பித்தல் பொறுப்பு.**

நிகழ்வு சமநிலை அடிப்படையில் நிரூபித்தல் போதுமானது.

**நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.**

**பிரிவு - 8**

**இடைக்கால பாதுகாப்பு ஆணை பாதுகாப்புக் கட்டளை மூலம் பின்வருவனவற்றை தடுக்க முடியும்.**

ஏதாவது வீட்டிம்சை புரிதல்.

வீட்டிம்சை புரிய இன்னொருவரின் உதவியைப் பெறுதல்.

வாதியின் வதிவிடம் வேலை செய்யுமிடம், பாடசாலை என்பவற்றுள் புகுதல்.

கூட்டு வசிப்பிடத்தை ஆக்கிரமித்தல்.

பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய் யும் உறவினர், நண்பர், சமூக சேவை யாளர் அல்லது மருத்துவர் மீது வன்முறை புரிதல்.

குடும்ப / கூட்டு வளங்களைப் பாவிப்பதற்கு ஊறுவிளைவித்தல்.

கூட்டாக உரிமையுடைய குடும்ப ஆதனங்களை விற்றல்.

**மேற்குறித்த ஆணைகளுக்கு மேலதிகமாக நீதிமன்றமானது பின்வரும் அதிகாரங்களை இடலாம்.**

**C**

வாதிக்கு தேவையான அவசர நிதி உதவி.

தண்டனை இழப்புக்களின் செலவு.

பிரதிவாதியிடமுள்ள எந்த ஆயுதத்தையும் கைப்பற்ற பொலிசைக் கோருதல்.


படிப்பகம்

www.padippakam.com

தனது தனிப்பட்ட உடமைகளை எடுக்க பொலிசார் உதவுதல்.

அறிவுரை, மனோ வைத்தியம்/புனர்வாழ்வு மருத்துவம் பெற செய்தல்.

இருவரும் உளவள ஆலோசனை பெறுதல்.

இருவருக்கும் இடையிலான உறவை கண்காணித்தல். (சமூக சேவையாளர், அறிவுரையாளர், மருத்துவர், பொலிசார், நண்பர் அல்லது நீதிமன்றம் தகுந்ததென காணும் நபர் மூலம்)

தற்காலிக தங்குமிட ஏற்பாடு.

**பாதுகாப்பு கட்டளையை கைவாங்கல்.**

பாதுகாப்பு கட்டளை / இடைக்கால பாதுகாப்பு கட்டளையை மாற்ற / புதுப்பிக்க / திருத்த / இரத்து செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரமுண்டு

இங்கு இருவரையும் விசாரித்து விண்ணப்பம் தன்னிச்சையாக செய்யப்பட்டது என நீதிமன்றம் திருப்திப்பட வேண்டும்.

இவைதவிர பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினரால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைபில் மேலதிகமாக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதாவது பிரிவு-15 இல் வீட்டிம்சை பற்றிய வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் பொலிஸ்மா அதிபர் பிரசுரிக்க வேண்டும் என்றும் அதன் பிரதியை

I பாராளுமன்றம்,
II மகளிர் விவகார நீதி அமைச்சுகள்,
III மகளிர் பணியகம்,
IV மகளிர் தொடர்பான தேசிய குழு,
V மனித உரிமைகள் ஆணைக்குழு,
VI தேசிய பிள்ளை பாதுகாப்பு அதிகார சபை,
VII மனித உரிமைகள், பெண்கள் அல்லது பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட அமைப்புக்கள்

ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு நபரும் அறிக்கையின் பிரதியொன்றை கொள்வனவு செய்ய உரிமையுடையவராக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பிரிவு 17ன் பிரகாரம் விசாரணையின் போது சமூகமளிக்க கூடிய வர்கள் என குறிப்பிட்ட சிலரை மாத்திரம் காட்டுகிறது. அதாவது நீதிமன்ற உத்தியோகத்தர் நடவடிக்கை தொடர்புடைய தரப்பினர். சட்டப்பிரதிநிதி, சாட்சிகள், மனுதாரருக்கு / பிரதிவாதிக்கு ஆதரவளிக்கும் வகையில் மூன்றுக்கு மேற்பட்டோர், நீதிமன்றம் அனுமதிக்கும் யாராவது நபர் எனக் குறிப்பிட் டுள்ளது. இதன்படி வீட்டிம்சைகளை விசாரிப்பதற்காக ஒரு விசேட நீதிமன்றத்தின் தேவை காட்டப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகிறது.

தகவலைப் பிரசுரித்தல் தொடர்பில் விசாரணையுடன் தொடர் புடைய எந்தவொரு நபரினதும் அடையாளத்தை நேரடியாகவோ /மறை முகமாகவோ வெளிப்படுத்தி பிரசுரிக்க கூடாது. எந்த தகவலையும் வெளியிடக்கூடாது என நீதிமன்றம் கட்டளையிடலாம். எனினும், அடை யாளங்களைக் குறிப்பிடாது நல்லெண்ண அறிக்கையொன்றை பிரசுரிப்பது தவறாகாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வீட்டிம்சை / வீட்டுவன்முறை சட்டமானது ஆக்கப் படும் பட்சத்தில் வெறும் பெயரளவிலான சட்டமாக அமையாது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பக்க ஏற்பாடுகளையும் கொண்டிருக்குமா னால் மட்டுமே அது செயற்பாடுடைய சட்டமாக அமையும் என்பது எனது கருத்து. அதற்காக நீதவான்கள், சட்டத்தரணிகள், பொலிஸ் உத்தியோகத் தர்கள் ஏன் முழுச் சமூகமுமே செயற்படக் கூடியவர்களாக உருவாக வேண்டும். சட்டத்தால் குற்றங்களைத்தடுக்க முடியாது. ஆனால் குறைப்ப தற்கு அல்லது இந்தக் குற்றத்தைப் புரிவதன் மூலம் இந்த தண்டனையை அனுபவிப்பீர் அல்லது தண்டப்பணத்தை அல்லது நட்ட ஈட்டைச் செலுத்து வீர் என அச்சுறுத்துவதற்கு சட்டம் ஏதுவாக அமையும். வீட்டு வன்முறைக ளைத் தவிர்ப்பது ஒவ்வொரு தனிநபர்களினதும் கையிலேயே தங்கியுள்ளது.





படிப்பகம்

www.padippakam.com

# பெண்களும் போரும்!

நாங்கள் பெண்கள்
எவ்வளவு தவறானதும் தவிர்க்கக் கூடியதும்
போர் என்று
புத்திரர்க்குக் கற்றுக்கொடுக்கின்றோம்.

ஆனால்
ஆண்கள் நீங்கள்
அறிவும் பலமும் மிக்க நீங்கள்

ஒருவர்மேல் ஒருவர் பாய்கிறீர்கள்
பிய்த்துக் கொள்கிறீர்கள்
உங்கள் சகபாடிகளைப் பட்டினி போடுகிறீர்கள்
சாக்கொல்லுகிறீர்கள்
பின்னர் அத்தகு
தீரச் செயல்கட்காய்
கரவோசை கேட்டு விரும்பி நிற்கிறீர்கள்
பெருமிதமும் இறுமாப்பும் அடைந்து கொள்கிறீர்கள்
எத்தனையெத்தனை விதவையரை உருவாக்கினீர்களெனப்
பாடல் எதிலும் படிக்கப்படவில்லை எனில்
புகழ்க் காவியங்கள் எதிலும்
ரத்தத்தால் வடிக்கப்பட வில்லை எனில்
எம் கவிவாணர்தம் படைப்புந்தல்
மேலுமெழ முடியாத் துயிலிலென்றும்
அவர்கள் மரணத்தி லென்றும்
ஏன் வலிந்து கொள்கிறீர்கள்?

ஆனால்
பெண்கள் நாங்களோ என்ன செய்ய
நிசப்தமான வீடுகளில்
காத்திருப்பதையும்
துயருறுவதையும் தவிர?
போர் அறைகூவல் எக்காளத் தொனிகள்



படிப்பகம்

www.padippakam.com

எமக்காக அல்ல
வெற்றிகொள் காலத்துப் பெருமிதமோ
வரவேற்றசையும் பதாதைகளோ
எமக்காக அல்ல

மெல்ல மெல்ல விழுங்கும் பீதியும்
நிச்சயமின்மையின் வதையுமே
எமக்கானவை.

அதே கையறுநிலையுடன்
கட்டற்ற யுத்தமே தினமும்
ஆனால் கடைசியில்
உங்கள் வாகை சூடல்கள்
எம் செவிகளை அடைகையில் கூடவே
பாழ்படுத்தப்பட்ட எண்ணற்ற வீடுகள்
மரணித்துப் போனவர்க்காய் மற்றைப் பெண்கள்
எழுப்பிவிடும் அழுகுரல்கள்
கூடவே வந்து சிந்தையில் உறைக்கிறது.

ஆண்களே அறிவுநிறை ஆண்களே அதிமானுடர்களே
இந்த மாபெரும் யுகத்தில்
சொல்லும்
போருக்கு மாற்று வழியே இல்லையா?
இல்லையே என்பது உங்கள் தம் பதிலெனில்
எங்கள் புத்திரரை ஓநாய்களாய் வளர்ப்போம்
தொட்டிலில் வைத்தே
கொல்லும் கலையைக் கற்றுக் கொடுப்போம்.

போர்ப் பிரகடனங்களை ஆண்கள்
நீங்கள் செய்யும் பொழுதினில்
பெண்கள் நாங்கள் சமாதானம் பேசுவதில்
தொழிலையும் பொழுதையும் தொலைப்பானேன்?

ஆங்கிலத்தில் : **எல்லா வீலர் வில்கொக்ஸ்**
தமிழில் : **சி. ஜெயசங்கர்.**

நன்றி ஒப்சன் (Options)
Vol 30, 2nd Quarter 2002


படிப்பகம்

www.padippakam.com

# சந்தர்ப்ப மிருகம்

*-விஜயலட்சுமி சேகர்-*

இன்னும் கொஞ்ச நேரத்தில் அல்லது இப்பொழுதோ அந்தக்காகம் சைலிமிஸ்சின் மோட்டார் சைக்கிளை கறைப்படுத்தப் போகிறது. கைக்கெட்டிய தூரம்தான். சூ.... சூ... எனும் சத்தமே போதும் காகம் பறந்துவிடும் கல்பனாவால் காகத்தை விரட்டமுடியும். ஆனால் தன்னை மீறிய உணர்வில் காகம் செய்யப்போகும் துஷ்ட செயலை வரவேற்க வேண்டும் போல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

சைலி, எதற்கெடுத்தாலும் மற்றவர்கள் மேல் பழி போட்டு பழிபோட்டே தன்னை உயர்த்திக்கொள்பவள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அனைவர் முன்னும் கல்பனா உட்பட எல்லோரையும் மட்டம் தட்டி தட்டி சந்தோசம் அடைபவள். தன் திறமையை இன்னொருவரை தாழ்த்தி காட்டுவதன் மூலம் வளர்த்துக்கொள்பவள். காகம் பின் இருக்கையில் இருந்து முன் கம்பிக்கு தாவுகிறது. இன்னும் சிறிது நேரத்தில் எச்சப்படுத்திவிடுவது நிச்சயம். மனம் குதூகலிக்கிறது. வழியில் கிடக்கும் முள்ளை தாண்டிவந்து, பலபேரைச் சொல்லி தூக்கி எறிந்து விடுபவள் தானே சைலி. பாவம் அவர்கள் - முள் பொறுக்கியது மட்டுமல்லாமல், ஏன் கவனிக்கவில்லை? இவ்வாறு அவதானமில்லாமல் நடக்கலாமா? பொறுப்பில்லாத உங்களால் எப்படி ஒழுங்காக வேலை செய்யமுடியும்? இப்படியே பல குற்றச்சாட்டுக்களைச் சுமந்து கைகட்டி வாய்பொத்தி நிற்கையில், தான் பொறுப்புடன் நடந்துகொண்டதாக ஊரைக்கூட்டி சொல்லக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக சைலி மகிழ்ந்து கொள்வதை எத்தனை தடவை கவனித்திருக்கிறாள் கல்பனா.

காகம் கா... கா... எனக்கத்தியபடி மரத்தைப் பார்க்கிறது. ஐயய்யோ பாழாய்ப்போன காகம் பறந்துவிடப் போகிறதோ. மனம் பட படக்கிறது. காகம் பறக்கக் கூடாது. அது செய்யப்போகும் துஷ்டத் தனத்தை மனம் ஆவலாய் வரவேற்றுக்கொண்டுள்ளது.

இன்று எப்படியும் இந்தக் காகம் இவள் சைக்கிளின் இருக்கையை அழுக்குப்படுத்தத்தான் போகிறது. அனைவர் முன்னும் இவள் இதைத் துடைக்கத்தான் வேண்டும். யாரையும் கூப்பிட்டு என்ன சாட்டுச் சொல்லி இவள் துடைப்பாள். தனக்காக பகிரங்கமாக மற்றவர்களை வேலை வாங்க மாட்டாள். அவள் தந்திரம் கல்பனாவுக்குத் தெரியும். என்றாலும் அவளுக்கு வேலை செய்வதற்கும், அதன்மூலம் தங்கள் காரியங்களை முடித்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொள்வதற்கும் எத்தனையோபேர் காத்துக்கிடக்கிறார்கள். அத்தனைபேரும் அவளால் அடிக்கடி அவமானத்துக்குள்ளாகுபவர்கள் தான். அதற்காக அவளை பழிவாங்கும் செயலில் ஈடுபட்டால் தாம் அடியோடு நாசம் ஆவோம் என எண்ணி, வாழ்வை ஓட்டவேண்டுமே எனும் கட்டாயத்தில் மேடம் . . . மேடம் . . . என குழைந்து குழைந்து ஓடுவர். இவர்களைக் கண்டு எரிச்சல் பட்டாலும் பிறகு பாவமாய் கல்பனாவுக்கு இருக்கும். மேடம். . . மேடம் . . என்பதெல்லாம் உதட்டளவில் மட்டும்தான் மனதில் கொஞ்சமும் மரியாதை இல்லை என்பது சைலிக்கும் புரிந் திருக்கும்.

அவளுடன் போட்டி போட்டு நியாயத்தை நிருபிக்கும் திறமை தனக்கில்லை என்பதை உணர்ந்து தானாகவே ஒதுங்கி ஒதுங்கி தானுண்டு தன் வேலையுண்டு என அவளுடனான சந்தர்ப்பங்களை எப்படியும் தவிர்த்துக்கொள்வாள் கல்பனா. எப்படியோ இன்று இந்தக் காகம் மூலமா வது இவள் தண்டிக்கப்பட வேண்டும். செய்வதறியாது திகைக்க வேண்டும். பிறர் துன்பத்தை உணர வேண்டும். அவள் பேப்பர் தேடி அசிங்கம் துடைப்பது கல்பனாவின் கண்முன் வருகிறது. கல்ப்பனா மனதில் ஒரு சிலிப்புத் தட்டுகிறது. “என்ன இது அடுத்தவன் துன்பத்தில் ஆனந்தப் படுவதை நான் விரும்புகிறேனா? நிச்சயமாக நான் விரும்பித் தானே இவ்வாறு கண்முன்னே ரசித்தபடி பார்த்துக்கொண்டிருக்கிறேன்”.

“எனக்குள் ஏன் இந்த அசுரத்தனம். நான் தெய்வம் இல்லை, என்றாலும் இதுவரை அசுரத்தனங்களை, வக்கிரங்களை வளர்க்கக்கூடாது என்பதில் எனக்கு நானே ஆசைப்படுவதும், வறையறைகளை, கட்டுப்பாடு களை வளர்த்துக் கொண்டதும் வீணாகிவிட்டதா? எனக்கு குழிவெட்டினாள் என்பதற்காக நானும் குழி வெட்டுவதா? கொலைக்கு கொலையும், குழி வெட்டுபவனுக்கு குழி வெட்டுவதும், குண்டு வைத்ததற்கு பதிலாக குண்டு வைத்து அழிப்பதையும் ஏற்றுக்கொள்பவளா நான்? காகம் செய்யும் அநீதியை ஏற்றுக்கொண்டேன் என்றால் எனக்கும், அவளுக்கும், அவர் களுக்கும், என்ன வித்தியாசம்? மனிதம் எனும் மனிதத்தனத்தில் இருந்து நழுவி நழுவி நரகலோகத்தில் விழும் எல்லைக்கு என் கால் வந்து விட்டதே”. இப்பொழுது கல்பனாவின் மனதில் தெய்வபயம் குந்திக்கொள் கிறது. அசுரர்கள் நீண்ட காலம் வாழ்ந்ததாக வரலாறு இல்லைதானே. இருக்கையில் இருந்து அவளின் உடலும் மனமும் அசைய வாய் சூ. . . சூ . . . என்றபடி கை முன்னே விரிகிறது. அனைத்தும் பறந்து விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# துணியார் பேருந்திலே . . .

பெனி

யாரோ ஒருவனின் கை - என்
மார்பில் படர்கிறது.

யதார்த்தமாக அன்றேல் ஒரு
விபத்தாக பாவனை செய்கிறான்.

சட்டென்று தட்டிவிட்டு
சற்று நேரம் கழித்து
உற்றுப் பார்த்தால் - இது
திட்டமிட்ட தீண்டலெனப்
புரிகிறது.

வியர்வை பொங்கி பிரவகிக்கும்
உஷ்ணக் காலத்தில்
தீப்பெட்டிக்குள் சிறைப்பட்ட
தீக்குச்சிகளைப் போல்
பயணிகள்.

சனத்தைப் பற்றிய கவலையின்றி
சம்பளத்திற்காக ஓட்டும் சாரதி.

இருக்கைக்கு அதிகமாக
ஆட்களைத் திணிக்கும்
அவசரத்தில்
மனிதர்களை மனிதர்களென
மறந்துவிடும்
நடத்துனர்.



படிப்பகம்

www.padippakam.com

கால் வைப்பதற்கும்
மூச்சு விடுவதற்கும்
திணருகையில்
இதற்காகவே காத்திருந்து
யதார்த்தமாகவும் விபத்தாகவும்
பாவனை செய்து
மார்பிலும், தொடையிலும்
உரசும்
துரு பிடித்த ஜென்மங்களின்
சபலங்கள்
சல்லாபங்கள்.

இப்பொழுதைய
எனக்காகவும், - என்
எதிர்காலத்திற்காகவும்,
என் தம்பி, தங்கை
சகோதரங்களுக்காகவும்
என்னைப் பெற்றோர்களுக்காகவும்
இந்த
நரகங்களை ஜீரணித்து கொள்ளும்
நான்.

ஒன்று புரிகிறது
நாளைய விடிவிற்கு
சேகரிக்கும்
அவசரத்தில்
இன்றைய அநீதிகளை
மன்னிப்பது பாவம்.


படிப்பகம்

www.padippakam.com

# என்னைப் போல்

மூலையில் கிடக்கும் கதிரை
எவ்வளவு திருப்தியைத் தருகிறது
அது அதிலே இருப்பது போதும்
அப்பப்போ கண்ணில் பட்டுக் கொண்டு . . .

மூலையில் கிடக்கும் கதிரை
எவ்வளவு தைரியத்தைத் தருகிறது
பூட்டிய வீட்டைத்திறக்கும் போது
அது கண்ணில் பட்டுத்தரும் நிறைவு

அமரத் தேவையில்லை
அதன்
வார்னிஸ் பூச்சில்லாத
இயற்கைச் சொரசொரப்பைத்
தடவிக்கூடப் பார்க்கத் தேவையில்லை.

மேலும்,
நீ அதனுடன் சத்தமாகப் பேசிக்கொள்ளலாம்
ஒரு தலைப்பட்சமாய்
அது உன்னுடனோ சுவருடனோ
தனக்குத் தானாகவே பேசுவது
கேட்காதது போல . . .

மூலையில் கிடக்கும் கதிரை
அது அதனிடத்தில் இல்லாமல் போகுமென்பதே
தாங்க முடியாததாய் உனக்கு
அதனிருப்பு என்னைப் போல் . .


படிப்பகம்

www.padippakam.com

# பரிநிர்வாணம் . . . ?

புத்தர் நான்
மீண்டும்
பரிநிர்வாணம் பெறுவதற்காய்
விடுக்கும் வேண்டுகோள்

தயது செய்து என்னைத் தங்கத்தால் போர்த்தாதீர்!
தயது செய்து ஆசைகளை என் பெயரால் வளர்க்காதீர்!
தயது செய்து இயற்கையை என் பெயரால் அழிக்காதீர்!
தயது செய்து பதவிகளில் என் பெயரால் அமராதீர்!
தயது செய்து கொலைகளை என் பெயரால் புரியாதீர்!

நான் விடுதலைபெற வேண்டும்
எல்லாத் தளைகளிலுமிருந்தும்
விடுதலை பெற வேண்டும்

மரணம், பிணி, துன்பம் . . .
பதவி, ஆசை, இன்பம் . . .
எதற்கெல்லாம் அச்சப்பட்டுத் தூரத்தூர ஓடினேனோ
அவற்றைக் கொண்டெனைத் துரத்தாதீர்

புத்தர் நான்
தயவுடன் விடுக்கும் வேண்டுகோள்
மீண்டும் எனை முழுமையாய்
பரிநிர்வாணம் காண விடுங்கள்

வாசுகி ஜெயசங்கர்



படிப்பகம்

www.padippakam.com

# கனடா - இலங்கை இளைஞர், யுவதிகள் பரிமாற்று நிகழ்ச்சித் திட்டம் - 2002

சமூக அடிப்படை ஆய்வுப் பயிற்சிநெறி

கொழும்பிலுள்ள இலங்கை - கனடா அபிவிருத்தி நிதியம் ஒவ்வொரு வருடமும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தொண்டராக வேலை செய்யும் இளைஞர் யுவதிகளுக்காக இளைஞர், யுவதிகள் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்தி வருகிறார்கள். இவ்வருடமும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய அங்கத்தவர் உட்பட பொலநறுவை, அநுராதபுரம், மொனராகலை, களுத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த எட்டுப்பேர் (4 பெண், 4 ஆண்) தெரிவுசெய்யப்பட்டு இப்பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்டோம். இதற்காக "சுபோதி" பயிற்சி நிலையத்தில் ஒருமாதம் அடிப்படை ஆங்கில வகுப்பும், நிகழ்ச்சித் திட்டம் பற்றிய வகுப்பும் நடைபெற்றது.

நாம் ஆவணி 11ம் திகதி கனடா நோவாஸ் கோசியா (Novas Cotia) என்ற மாகாணத்தை சென்றடைந்தோம். அங்கு டள்ஹவுள் என்ற பல்கலைக்கழகத்தில், ஒருகிழமை எமக்கு ஆங்கில வகுப்பும், கனடா கலாசாரம் பற்றிய வகுப்பும், சில விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகளும் வழங்கப்பட்டன.

18.08.2002 அன்று "ரற்றமகோஸ்" (Tatamagonche) என்ற பயிற்சி நிலையத்திற்கு சென்றோம். அங்கு பல பகுதியையும் சேர்ந்த 4 ஆண்கள், 4 பெண்கள், எம்மை வரவேற்று அறிமுகம் செய்துகொண்டனர். பின்னர் "சமூக அடிப்படை வள முகாமைத்துவம்" (Community Bace Resoure Management) எனும் எமது நிகழ்ச்சித்திட்டத் தலைப்பில் பல பயிற்சிகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நடைபெற்றன.

இங்கு வழங்கப்பட்ட இலங்கை - கனடா கலாசாரம், தொடர்பாடல், ஒவ்வொருவரினதும் விஷேட திறமைகள், பாலிகள் தொந்தரவு, விருந்தோம்பும் குடும்பங்கள் பற்றிய பகிர்வு, போன்ற பயிற்சி வகுப்புக்கள் - கலந்துரையாடல்கள் மூலமும், அளிக்கைகள் மூலமும், விளையாட்டுக்கள் மூலமும் நடைபெற்றன.

22.08.2002 அன்று பழைய பிரிந்தானியர் இல்லம் (Prese Cott House) எனும் இடத்திற்கு சென்றோம். அங்கு எஸ்.எல்.சி.டி.எப். (SLCDF), சி.டபிள்யு.வை (CWY) சேர்ந்த நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்கள் எமது



படிப்பகம்

www.padippakam.com

நோக்கம் பற்றி (கனடா வேள்ட் யுத்) விளக்கம் அளித்தார்கள். பின் இலங்கையைச் சேர்ந்த எம்மை கனடாவைச் சேர்ந்த 8 பயிற்சியாளர்களும் ஒவ்வொருவர் வீதமாக விருந்தோம்பும் குடும்பங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். 3 நாள் பயிற்சியின் பின் நாம் செய்யவேண்டிய வேலையின் தலைப்புகள் தரப்பட்டது. இதில் நானும் எனது நண்பரும் உடல் உளநிலை பாதிக்கப்பட்ட மக்களுடன் வேலை செய்வதை தெரிவுசெய்து அவர்களுடன் எல்.ஆர்ச் (L' Arche) எனும் இடத்தில் 2 கிழமை வேலை செய்தோம். அதன் பின்னர் பின்வரும் தலைப்புக்களில் எமக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

1. வயது வந்தவர்களுக்கான கல்வி (Adult Education)
2. நிகழ்ச்சித்திட்டம் வரைதல் (Proposal Writing)
3. முரண்பாடுகளைத் தீர்த்தல் (Conflict resolution)
4. அறிக்கை எழுதுதல் (Report Writing)
5. ஆய்வு முறைகள் (Research Methods)
6. தொடர்பாடல் (Communication)

## எல். ஆர்ச்சின் அடையாளமும் நோக்கமும்

எல். ஆர்ச்சின் (L' Arche) என்பது உலகளாவிய ரீதியில் 120 சமூகங்களில் இயங்கிவரும் ஒரு சர்வதேச சமூக மட்டத்திலான அமைப்பாகும். அறிவுசார் குறைபாடுகளுடன் வாழும் மக்களுக்காக அவர்கள் உளவள நலன் அபிவிருத்திக்காக ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனம் உருவாகியது. இது மக்களுடன் கொண்டுள்ள உறவுமுறையானது, கருத்தியல்கள், கருத்துச் சார்ந்த வாதங்கள், மதிப்பீடுகள் என்பவற்றினூடாக தொடர்புகொள்ளாமல் - மக்களின் இதயத்திலிருந்து இதயத்திற்கூடாக அவர்களின் நோ, சந்தோசம், எதிர்பார்ப்பு, அவர்களின் வரலாறு என்பவற்றை கேட்டறிதல் மூலம் தொடர்பையும், உறவையும் வைத்துள்ளது. இது பின்வரும் கொள்கைகளைக் கொண்டுள்ளது.

1. உள, உடல் நிலை பாதிக்கப்பட்டவர்கள் அபிவிருத்தி சார்ந்த வகையில் வாழ்வதற்கு, வேலை செய்வதற்கு ஒன்றாக சேமிப்பதற்கு வீட்டை அமைப்பதற்கு உதவி செய்தல்.


படிப்பகம்

www.padippakam.com

2. இவர்களின் தனித்துவங்களையும் ஆற்றல்களையும் அடையாளப் படுத்துதல்.
3. அன்பைக் கொடுத்து அன்பைப் பெறும் வகையிலான இருபக்க தொடர்புகளைப் பேணல்.
4. அறிவு சார்ந்த குறைபாடுகளுடன் வாழும் மக்களுக்காக இல்லங்களை உருவாக்குதல். உலகிற்கு அவர்களின் தனித்துவமான தன்மைகளை வெளிக்காட்டல், போன்றவற்றினூடாக இறுதியாக எமது சமூகத்தில் குறைபாடுகளையுடையவர்கள் மீது அன்பு செலுத்தும் ஒரு மாறுதலை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டது.

**மனநிலை பாதிக்கப்பட்ட மக்களுடன் என் அனுபவம் . . .**

மனநிலைக் குறைபாடுடைய மக்களுடன் வேலைசெய்த போது மிகவும் மறக்கமுடியாத அனுபவங்களையும், வாழ்க்கைப் பாடங்களையும் கற்றுக்கொண்டேன். அங்கு வேலைசெய்யும் அலுவலகர்கள் அந்த மக்களை அணுகும் முறைகள், அவர்கள் காட்டும் அக்கறை என்னை மிகவும் கவர்ந்து கொண்டது. அவர்களை வேறுபாடுகள் இல்லாமல் தங்களின் பிள்ளைகள், சகோதரர் போல் சகலவிதத்திலும் சமத்துவமாக நடாத்துவார்கள். மிகவும் நெருக்கமான நட்புறவை இங்குள்ள அலுவலகர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடையில் ஏற்படுத்தியுள்ளார்கள். அவர்களின் நன்மை, தீமைகளில் பங்கெடுத்து அவர்களின் சந்தோஷங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அதற்கேற்ற வகையில் அவர்களுடன் உறவாடுவார்கள். இப்படிப் பட்ட குறைபாடுகளை உடைய மக்களாலும் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை பல செயற்பாடுகளுடாக வெளிப்படுத்துவார்கள். இங்கு மனநிலை குறைபாடுகளுடைய மக்களுக்கும், அலுவலர்களுக்கும் இடையில் ஒருமித்த மனப்பகிர்வினை பகிர்ந்துகொள்வதை காணக்கூடியதாய் இருந்தது.

அவர்களை நீச்சல் தடாகத்திற்கு, பூங்காவிற்கு, ஏனைய விளையாட்டுத் தளங்களுக்கும் அழைத்துச் சென்று பயிற்சிகள் வழங்குவர். மற்றும் உடல், உளம் சார்ந்த மருத்துவங்களும் அவர்களுக்கு அளிக்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

இவர்களுடன் நானும் இரண்டரை மாதங்கள் இணைந்து செயற்பட்டது மிகவும் முக்கியம் வாய்ந்த மறக்கமுடியாத நிகழ்வாகும். சகலத்திலும் என்னை மாற்றிக்கொண்டு என்னால் முடிந்தவற்றை குறுகிய காலமாவது அவர்களுடன் பகிர்ந்துகொண்டது மிகவும் சந்தோஷமான அனுபவம்.

*அருட்கவிதா தேவநாயகம்.*






படிப்பகம்

www.padippakam.com

# சோர்ந்திடும் மனமே மீண்டெழு ...

வாழ்க்கை வண்டி ஓடுதம்மா
வந்த புயல் ஓயலையே
வாழத்தான் பிடிக்கலையே
வாழவும் வேண்டுமம்மா.

சோர்ந்து விடும் உள்ளமது
சொந்தங்களை எண்ணி ஏங்குதம்மா.
பயணம் தொடர்கின்றது
பாதை தெரியலையே.

உள்ளூர தன்னம்பிக்கை
ஒருநிலைப்படுத்துதம்மா.
எண்ணங்கள் சிதறியேதான்
என்னில் என்னைத் தேடுகின்றேன்.

தூரத்தில் ஓர் அழைப்பு
உணர்வுகளை உருக்குதம்மா.
சாதிப்பேன் நான் என்று
மீண்டுமே எழுகின்றேன்.

இராமையா அருள்ஜோதி



படிப்பகம்

www.padippakam.com

# மட்டக்களப்பு கிராமியப் பெண்களும் தற்போதைய பொருளாதார நிலைமைகளும்!

தில்லை

மட்டக்களப்பு மாவட்டக் கிராமியப் பெண்களிடம் இனங்காணப்பட்ட குடும்ப, மற்றும் சமூக நிலைமைகளில் அவற்றை மேம்படுத்துவதற்குப் பயன்படக்கூடிய பொருளாதார முயற்சி பற்றிய சில யோசனைகள் இக் கட்டுரையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

இக்கட்டுரையானது சமூக அமைப்புக்களின் நிருவாகிகளின் மனதில் கிராமியப் பெண்களின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அவற்றை மேம்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை குறித்தும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராமியப் பொருளாதாரம், உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்டதாகவே காலம் காலமாகவும் இன்றளவும் வளர்ந்து வந்துள்ளது. கிராமிய அபிவிருத்தி முறைகளுக்கும் சுயபொருளாதாரக் கொள்கைக்கும் இடையிலான நேரடித் தொடர்பையும் இதனடிப்படையில் அறிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகவும் உள்ளது. குறிப்பாக மட்டக்களப்பு கிராமியப் பெண்கள் மத்தியில் அவர்களது தனிப்பட்ட குடும்ப பொருளாதாரம் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய சமூக நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி வருவதோடு சிறுமிகளாக, வயது வந்தவர்களாக, இளம் வயதில் கணவனை இழந்தவர்களாக, வறிய மற்றும் முதியோராக உள்ள கிராமியப் பெண்கள் தமக்காகவும் தமது குடும்பத்திற்காகவும் முழுமையாகவோ கணிசமான அளவோ பொருளீட்ட உழைப்பவர்களாகவே யுள்ளனர். இப் பெண்களில் பெரும்பாலானோர் உடலுழைப்பில் ஈடுபடுபவர்களாகவே உள்ளனர். இவர்களில் அனேகம் பெண்கள் தினக் கூலிக்கு செல்லும் அதேவேளை இப்பெண்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவே அதிக நேரம் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான குடும்பங்களில் உள்ள தாய்மார் தமது பிள்ளைகளைக் கல்வி பெறப் பாடசாலைக்கு அனுப்பவே மிகவும் சிரமப்படுகிறார்கள். காரணம் பிள்ளைகளும் உழைக்க வேண்டியுள்ளதும் ஒரு காரணமாக அமைகின்றது.

மட்டக்களப்பு கிராமியப் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் குடும்ப, பொருளாதாரநிலை ஓரளவேனும் திருப்தியானதாக இருக்க வேண்டும் எனில் அப்பெண்களுடைய குறைந்தபட்ச பொருளாதாரச் சுதந்திரம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் சமூகத்தில்



படிப்பகம்

www.padippakam.com

உணரப்படவேண்டும். தற்காலிகச் சந்தைப் பொருளாதாரம் மற்றும் இலத்திரனியல் மயமாக்கப்பட்ட அதிநவீன உற்பத்தி முறைகள் என்பன சமூகத்தின் சகல மட்டத்தினரையும் வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தினாலும் குறிப்பாக மட்டக்களப்பு கிராமிய பெண்களுக்கும் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பில் அப்பெண்கள் வேண்டி நிற்பது பொருளாதார விடுதலையே ஆகும். இதனூடாக கிராமிய பெண்களின் குடும்ப மற்றும் சமூக நிலைமைகளை அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சமூகத்தேவையும் உள்ளது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் அரசு, அரசு சாரா நிறுவனங்கள் கிராமியப் பெண்களுடைய சுயபொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டமிடப்பட்டதும் தொடர்ச்சியானதுமான பெண்கள் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டியதோடு கிராமிய பொருளாதார உற்பத்தியில் பாரம்பரிய உற்பத்திமுறைகளை ஊக்குவிப்பதோடு நவீன தொழில் நுட்பமுறைகளில் கிராமிய வளங்களைப் பாதிக்காத, சுரண்டல் இல்லாத தொழில்நுட்ப முறைகளையும் இனங்காட்ட வேண்டிய தேவையும் உள்ளது. அதனோடு அப்பெண்கள் தீர்மானங்கள் எடுப்பதற்கும், மேம்பாடான கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் முறைமைகளில் பங்காளிகளாவதற்கும் அபிவிருத்தி நிறுவனங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டியதன் தேவையும் வேண்டப்படுகின்றது. இதுவே கிராமியப் பெண்களுக்கு முதன்மையான தேவையாகவும் உள்ளது. அதேவேளை அப்பெண்களுக்கு பாரம்பரிய எண்ணக்கருக்களில் சிந்தனைத் தெளிவு பெறக்கூடிய புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டியதன் தேவையும் உள்ளது. இவற்றுக்கூடாக கிராமியப் பெண்களின் முழுமையான பங்களிப்பை சிறந்த முறையில் பெறமுடியும்.

**இதனடிப்படையில் மட்டக்களப்பு கிராமிய பெண்களின் தற்போதைய குடும்ப மற்றும் சமூக நிலைமைகள் பற்றிய சில அவதானங்கள்.**

*. கிராமியப் பெண்களிடம் தமது சுயபுத்தியையும் சுயபலத்தையும் உணர்ந்து கொள்ளக் கூடிய விழிப்புணர்வு இல்லாமை ஒரு பிரதான விடயமாக உள்ளது.

*. பொதுவாகக் கிராமியப் பெண்களின் மனங்களில் தம் சூழ்நிலைபற்றிய புரிந்துணர்வு பாரம்பரியகாலமாகத் தெளிவுபடுத்தப்படாமல் இருத்தல்.

*. "நாகரீகம்" என்ற பெயரில் பாரம்பரியத் தொழில் முறைகளைக்



படிப்பகம்

www.padippakam.com

கைவிடல் நவீன தொழில்நுட்ப முறைகளால் கிராமியப் பெண்கள் கவரப்படல்.

*. கிராமிய உணவுப்பழக்க வழக்கங்கள் மாற்றமடைதலும் பாரம்பரிய உணவுமுறைகளும் தயாரிப்பு முறைகளும் கைவிடப்படலும்.

*. கிராமத்தின் நிலையான வளங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்படலும் அதனால் வளப்பற்றாக்குறை ஏற்படலும் வறுமையும்.

*. அனேகமான கிராமங்கள், தனியாரிலும், அரசு அரசுசாரா சமூக நிறுவனங்களிலும் பல்தேசியக் கம்பனிகளிலும் தங்கியிருத்தல்.

*. தம் கிராமிய அபிவிருத்தி பணிகளை வெளியாரிடம் எதிர்பார்த்திருப்பதால் அபிவிருத்தி பணிகள் காலம்கடத்திச் செல்லல்.

*. மேலைத்தேய மூலதன ஆதிக்கம் பற்றிய தெளிவு கிராமியப் பெண்களுக்கு உணர்த்தப்படாமல் இருப்பதும் அதுபற்றிய விழிப்புணர்வு இல்லாமையும்.

*. நவநாகரிக ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கையால் கிராமிய வளங்கள் வீண்விரயமாதல்.

*. பாரம்பரியகாலமாகப் பெண்கள் தாம் பலவீனமானவர்கள் என்ற கருத்து பெண்கள் மனதில் மேலோங்கியிருத்தல்.

*. அனைத்து அதிகாரங்களையும் கணவனோ, மற்றும் ஆண்கள் செலுத்துவதை ஏற்றுக் கொண்டிருத்தல்.

*. கிராமியப் பெண்களின் மனங்களில் ஆண்கள் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் என்ற கருத்து காலம்காலமாக சமூகத்தாலும், கலாசார ஊடகங்களாலும் பெண்களின் மனதில் ஊட்டப்படல்.

*. பாரம்பரியமாக யதார்த்தத்திற்கு மாறான மாயைக் கருத்து பெண்களின் மனதில் பதிந்து இருத்தல். அதாவது பெண்கள் தமது குடும்ப பாத்திரத்தை சமையல் செய்தல், குழந்தை பெற்று பராமரித்தல், கணவனுக்கு பணிவிடை செய்தல் போன்றவற்றோடு கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்து பெண்கள் மனதில் ஆழப்பதிந்து இருப்பது.


படிப்பகம்

www.padippakam.com

*. தமது சூழலிலுள்ள வளங்கள் பற்றிய விழிப்புணர்வின்மை. இதன் காரணமாக அந்நியர் வந்து அதைப் பயன்படுத்துவதை அனுமதித்த லும் சுரண்டலுக்கு இடமளித்தலும்.

* பாரம்பரியமாக மேலாதிக்க மனப்பாங்கு உள்ளவர்கள், கிராமியப் பெண்கள் பொருளாதார பலம் பெறுவதை அனுமதிக்காததாலும், சமூகத்தில் பெண்கள் உயர் தொழில் நுட்பமுடைய வேலைகளைச் செய்வதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டு இருக்கும் தன்மையாலும் அனேகமான கிராமியப் பெண்களிடம் சுயமான பொருளாதார பலமோ, ஆதனங்களோ இல்லாமை.

*. பாரம்பரியமாக ஆண்களின் மேலாண்மை காரணமாக பெண்களுடைய வேலைகளில் ஒத்துழைப்பு கொடுக்காமல் பெண்களைத் தனித்து குழந்தைப் பராமரிப்பு, ஆடை தோய்த்தல், உணவு தயாரித்தல், வீட்டைத் தூய்மைப்படுத்தல் போன்றவற்றைப் பெண்களே கவனிக்க வேண்டும் என்று பாரம்பரியமாக ஆண்களிடையே வலிமையான கருத்து நிலவுவதால் அவற்றைப் பகிர்ந்து கொள்வதில் ஆண்களுக் கிடையே பொறுப்பற்ற தன்மை நிலவுவதால், கிராமிய பெண்கள், கிராம மற்றும் சமூக விடயங்கள் அறிந்து கொள்வது தடுக்கப்படல், குடும்பம் என்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்படல்.

*. கிராமியப் பெண்களுடைய திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு இல்லாமையால் அப் பெண்களின் சொந்தத் தேவைகளும் திறமைகளும் அங்கிகரிக்கப்படாமல் விடுவதோடு பெண்கள் மற்றும் குழந்தைகளின் அடிப்படை வேலைகள் புறப்படுகின்றன.

*. கிராமப் புறங்களில் அதிகரித்துவரும் மக்கள் தொகையால் மட்டுப்ப டுத்தப்பட்ட வளங்களைப் பகிர்ந்துகொள்வதில் போட்டி, முரண்பாடு, பகைமை என்பன ஏற்படுவதோடு மேலைத்தேய கலாசாரச் செல்வாக் கினால் கிராமங்களில் காணப்பட்ட மனித நேயம் சமூக உணர்வுகள், பழக்கவழக்கங்கள் குறைந்துவருதல்.

*. வாழ்க்கைத்துணை இழந்து வறுமையில் உழலும் கிராமியப் பெண்க ளுக்கு சமூக தேவைகளைக் கையாலும் நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உண்மையான தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்வதை விடுத்து போலியான அரைகுறைகளை மாத்திரம் தீர்க்க முயலும் தன்மை, இதனால் சமூக கிராமிய நிலைமைகளை இனங் கண்டு தீர்க்க முயலாது எழுந்தமான தீர்மானங்களை நிறைவேற்றுதல்.


படிப்பகம்

www.padippakam.com

*. ஓரளவு படித்த கிராமியப் பெண்கள் வேலை பெறுவதற்காக பிரதேச, மற்றும் தேசிய அரசியலில் உயர் பதவி வகிப்போர், அரசியல்வாதிகள் ஆகியோரிடம் பெருந்தொகைப் பணத்தை கையூட்டாக கொடுக்கும் நிலைமைகள் உருவாகி வருவதோடு, அறியாமையில் உழலும் கிராமியப் பெண்கள் நகர்ப்புறத் தொழில் கொள்வோரால் ஊழியர் சேமலாப நிதி, மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் அடிப்படை உரிமைகள் அற்ற நிலையில் வேலை வாங்கப்படுதலும் வன்முறைகளுக்கு உட்படுதலும் நடைபெறுகின்றது.

இவ்வாறு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், அறியாமையையும் சமூகத்துக்குரியனவாக அணுகும்போது அச்சமூகத்தினை மையப்படுத்தி மட்டக்களப்பு கிராமியப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கவனத்தில் கொள்ளுதல் என்பது சமூகத்தின் கவனத்தினையும் பக்குவத்தினையும் வேண்டி நிற்கின்றன.

அந்த வகையில் எமது மட்டக்களப்பு சமூகத்தில் கிராமியப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டால் அவை குடும்ப வறுமை, வேலையின்மை, குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் காரணமாக பெண்கள் கூடுதல் பொறுப்புக்கள் சுமக்க வேண்டி வருதல், கீழுழைப்பு போன்றவை கிராமியப் பெண்களுக்கு அன்றாட அனுபவமாக வேயுள்ளது.

இவற்றையெல்லாம் விட எமது நாட்டில் உள்நாட்டு யுத்தத்தினால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மட்டக்களப்பு கிராமிய பெண்களின் நிலை மிகவும் மோசமாகவேயுள்ளது. குறிப்பாகத் தமிழ் கிராமியப் பெண்களின் நிலை மோசமானதாகவும் வேதனைக்குரியது மாகும். இதிலும் எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களின் நிலை மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளது. இவர்களில் அனேகமான பெண்கள் யுத்தத்தால் கணவனை இழந்தவர்களாகவும், கைது செய்தல், காணாமல் போதல், குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள், அங்கவீனம், காயத்திற்குள்ளாதல் உளநிலை பாதிப்படைதல், கல்வி, கற்கமுடியாத நிலைமை, தற்கொலை, மரணம், போன்றவற்றோடு - கிராமியப் பெண்கள் இராணுவத்தினரின் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு அல்லல் உற்ற நிலையில் உள்ளனர். இவ்வாறான அனேக பெண்கள் உள்ளூரில் கூலிவேலை செய்து குடும்ப சுமையைச் சுமப்பவர்களாகவும் யுத்த காரணங்களால் தாயை, அல்லது தந்தையை இழந்து குடும்ப பாரத்தை ஏற்றுள்ள பெண்களாகவும், யுத்த அத்துமீறல்களால் தமது உடமைகளை இழந்து இடம்பெயர்ந்த பெண்களாகவும் அத்தோடு வறுமை


படிப்பகம்

www.padippakam.com

காரணமாக தினமும் துன்பப்படும் பெண்களாகவும், கூலி வேலை செய்து குடும்பத்தைக் கொண்டு நடாத்த முடியாத பெண்களாகவும் மட்டக்களப்பு கிராமியப் பெண்கள் காணப்படுகின்றனர்.

உள்நாட்டு யுத்தத்தினால் மட்டக்களப்பு கிராமியப் பெண்கள் தமது சொந்த இடங்களில் தொழில் செய்யமுடியாத நிலையும் இராணுவ ஆக்கிரமிப்புக்களால் கடல் வளப்பகுதிகளும் விளை நிலங்களும் எல்லைப் படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு தடை செய்யப்பட்டு இருப்பதனாலும் பிரதான தொழில்களான கிராமிய பொருளாதார விவசாயம் செய்கை பண்ணப்படுவது குறைவாக இருப்பதனாலும், மீன் பிடிப்பது கட்டுப்படுத் தப்பட்டு இருப்பதனாலும் சுய தொழில் வாய்ப்புக்கள் செய்வதற்கான வளப்பற்றாக்குறையாலும் இன்று கூடுதலான கிராமியப்பெண்கள் அடிப் படை உணவுத் தேவையைத் தானும் பூர்த்தி செய்ய முடியாத வளம் குறைந்தவர்களாகவே அல்லல்படுகின்றனர், இவ்வாறு அவதியுறும் கிராமிய பெண்களின் உழைப்பு சக்திகள் உன்னத ஆற்றல் கௌரவிக்கப்படாமை யால் மூலதன ஆதிக்கத்தை திணிக்க முயல்வோராக நடாத்தப்படும் அந்நிய முகவர் நிறுவனங்கள் மிகவும் உரமான உழைப்பாளிகளான உயிர்த்துடிப்புள்ள கிராமியப் பெண்களை பணவலிமைக்கு சேவையாற்று வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் புது அவலம் எமது சமூகத்தில் உருவாகியுள்ளது.

இவ்வாறான அவலங்களைக் குறைக்கும் பொருட்டும், தற்போது நிலவுகின்ற சமூக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டும், கிராமியப் பெண்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு சமூகத்தை நிருவ கிக்கும் அனைத்து நிறுவனங்களும் சமூக மேம்பாட்டுக்கும் கிராமிய பொருளாதாரச் செழிப்புக்கும், கடுமையாக உழைக்கும் பெண்களின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்கு பொருளாதார சுதந்திரத்தையும் சமூக அந்தஸ்த்தையும் வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

மேலும் கிராமிய பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களுக்கும் பயிற்ச்சி அளித்தல், விழிப்புணர்வூட்டல், பாதுகாப்பு, சேமிப்பு போன்ற வற்றை அளித்தலும், ஊக்குவித்தலும் விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவையாகவுள்ளது.

ஆண்டாண்டு காலமாகச் சமூகத்தில் இருந்துவரும் "குடும்ப பொறுப்புக்களை சுமக்க வேண்டியவர்கள் பெண்களே" என்ற எதிர்பார்ப்பும் "ஆண்கள் குடும்ப பொறுப்பையும் பராமரிப்பையும் மேற்கொள்வது தமது சமூக பால்நிலைரீதியான மேலான்மைக்கு பொருத்தமற்றது" என்ற



படிப்பகம்

www.padippakam.com

பொறுப்பற்ற, யதார்த்தமற்ற கற்பனை காரணமாக கிராமிய குடும்பங்களிலும் சமூகத்திலும் புதிய புதிய அவலங்கள் உருவாகின்றது. இதனால் தொடர்ந்தும் பெண்கள் பொருளாதார விடுதலை பெற முடியாதவர்களாகவே அவதியுற நேரும்

எனவே ஆண்கள், யதார்த்தத்தை புரிந்து சமூக பால்நிலைப்பட்ட மேலாண்மைக் கருத்துக்களைத் தவிர்த்து நடைமுறைக்கு சாத்தியமான நிலைப்பாடுகளை மேற்கொள்வார்களானால் கிராமிய பெண்களின் குடும்ப சமூக அவலங்களைத் தவிர்த்து அவர்களை மேம்பாடான பொருளாதார வலிமையுள்ளவர்களாக வாழ விடலாம்.

இவ்வாறான ஓர் மேம்பட்ட சமூக சூழல் எதிர்காலத்தில் மட்டக்களப்பு கிராமிய பெண்கள் மத்தியில் உருவாவதற்கு சமூக மாற்றங்களுக்காக செயற்படும் நிறுவனங்கள் ஒத்துழைப்பும் உறுதியும் வழங்கும் என எதிர்பார்ப்பதில் என்ன தவறு இருக்கின்றது.






படிப்பகம்

www.padippakam.com

# இன்றும் பெண்கள்...!

நான்
சுதந்திரக்கவி
இயற்கைகளையே பாடுவேன்
நான்
நவீன ஓவியை
என் வாழ்க்கையையும்
சிக்கலான கோடுகளால் நான்
வரைந்திருக்கிறேன்
விளம்பரப்படுத்த விரும்பாத
விளக்கங்களை
எனக்குள் புதைத்திருக்கிறேன்
நேற்றைய கனவுகள்
இன்றைய ஆசைகள்
நாளைய விடியலில்
நாசமாய்ப் போகவா நாமிங்கு
பெண்ணாய் அவதரித்தோம்

மணநாளில் மட்டும்
இன்பமயம்
காலப் போக்கில்
காலன் அவன்வடிவில்
எத்தனை பெண்கள்
இத்தரை மீதில் இன்னமும்
கைவிடப்பட்ட காகிதமாய்க்
கசக்கப்படுகிறார்கள்
காகிதப் பூவென்றும்
கறைபடிந்த நிலாவென்றும்
சிரிப்பை அகந்தையென்றும்
சிந்திப்பை வீணென்றும்
எத்தனை காலம் தான்
தட்டிவிடும் இந்த ஆணினம்.

சீதனத்துக்கு
நன்கொடையென்றும்
ஆணவத்துக்கு


படிப்பகம்

www.padippakam.com

ஆண்மையென்றும்
சந்தேகத்தை
அக்கறையென்றும்
அதட்டலை
அன்பென்றும்
எத்தனை அர்த்தங்கள்
அவர்கள் அகராதியில்.

கரு "அறை" என்பதால்
இன்றும் பெண்கள்
சுவர்களோடு சுவாசிக்கிறார்கள்
சித்திரங்களைத் தோழியாக்கி
அயல்வீட்டுச் சங்கதியை
அதனோடு பேசி
பெருமூச்சாய்க் கலைகிறார்கள்.
அமாவாசை என்பது
பூரணச் சந்திரனுக்கான
புதிய விளம்பரம்
என்பதை விளங்காமல்
இன்றும்
அடுப்படியில் முடங்குகிறார்கள்.

பெண்களே!
மௌனம் பூண்டு
திடம் காத்து
நெஞ்சை நிமிர்த்தி
அடிமை விலங்கை
உடைத்தெறிந்து
பெண்ணாய்
புதிய உருவெடுங்கள்!

அ. சுபத்ரா குரூஸ்
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.


படிப்பகம்

www.padippakam.com

# பட்டது துளிர்த்தது!

வாசுகி குணரத்தினம்

'ம் . . . விடிந்து விட்டது. இன்று ஞாயிறு, விடுமுறை நாள். படுக்கைக்கு நேரெதிராகச் சுவரில் மாட்டப்பட்டிருந்த நாட் கலண்டரில் திகதியைப் பார்த்தபடி காலுக்குள் சிக்கி முறுகித் திணறிக் கொண்டிருந்த போர்வையை மெல்ல அகற்றியபடி சோம்பல் முறித்துக்கொள்கிறாள் இந்து.

இன்று வெளியே சென்று முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய உண்டு. அவற்றை ஒழுங்கு முறையாக சிந்தைக்குள் இருத்தியபடி, இன்று போவதா? இல்லை நாளை போவோமா? என்ற யோசனையில் தலைமுடியைக் கைகளால் கோதி எடுத்து முடிச்சுப் போட்டபடி ஒரு கொட்டாவியை விட்டுக்கொண்டு படுக்கையை கையில் தூக்கியபடி மெல்ல எழும்புகிறாள்.

"இந்து ரீ இந்தா . . . வந்து குடி". தாயின் குரல் அவளை வெளியே கொண்டு வருகிறது.

இந்துவுக்கு சூரியக் குளியல் மிகவும் பிடிக்கும். பனிபெய்யும் காலங்களில் இளங்காலை வெயிலில் சூரியனுக்கு நேராக முகத்தை வைத்துக்கொண்டு ஒளிக்கிரணங்களை உள்வாங்குவதில் அவளுக்கு அலாதிப்பிரியம்.அப்போதெல்லாம் இந்து வெள்ளைக்காரர்கள் கடற்கரை யில் வெயில் குளிப்பதை நினைத்துக்கொள்வாள். நீச்சல் உடையுடன் ஆண், பெண் வேறுபாடுகள், வெட்க உணர்வுகள் எதுவுமின்றி எப்படிச் சுதந்திரமாக அந்தச் சூரியனை அவர்களால் வரவேற்க முடிகிறது. என்னால் இப்படித் தனியாகப் போய்க் கடற்கரையில் படுக்க முடியுமா?

கற்பனை பண்ணிய இந்துவுக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. "என்ன இந்து தனிய நிண்டு சிரிக்கிறாய்? என்ன விஷயம் எண்டு எனக்கும் சொல்லு?"

அக்கா சாந்திமதி குழந்தைக்குப் பாலூட்டியபடி இந்துவைப் பார்த்து கேட்கிறாள்.


படிப்பகம்

www.padippakam.com

“ஒண்டுமில்லையக்கா நீச்சலுடையுடன் கடற்கரை வெயில்ல குளிக்கிற மாதிரியான ஒரு கற்பனை, அதுதான் சிரிச்சன்”.

“நானும் இவரும் பிள்ளையும் பாசிக்குடாக் கடல்ல விழுந்து விழுந்து ஒருநாள் குளிச்சனாங்க!”

“நீ நீச்சலுடை போட்டனீயா?” இல்ல, இல்ல உடுத்திருந்த உடுப்போடதான்.

“அக்கா, அது உனக்கு வசதியா இருந்ததா? இல்லாட்டி காலுக் குள்ள சிக்கி, உன்ன இடற வைத்து கடலுக்க தள்ளியதா? நீ தண்ணிக் குள்ள நிண்டு தடுமாறினதப் பார்த்தாக்கள், நல்ல சந்தோஷமாக் குளிக்கு துகள் எண்டு சொல்லியிருப்பாங்களே”!

“இந்து இது எப்படியடி உனக்குத் தெரியும்?” இது என்ன சொல்லித் தெரியவேணுமா? தடக்கு முடக்கு எண்டு உடுத்துக்கொண்டு தண்ணியில் இறங்கி குளிச்சா தெப்பத்தேர் அடையிறமாதிரித் தடுமாற வேண்டியது தான். இப்ப விளங்குதா நான் எப்படிக் குளிக்க வேணுமெண்டு கற்பனை பண்ணிச் சிரிச்சது!

“ஏன் அக்கா நாங்கள் அப்படி உடுப்ப மாத்தினால் என்ன? எங்கட வசதிக்கும் சவுகரியத்துக்கும் ஏத்தபடி எளிமையா குளிப்பதற்கு மட்டுமாவது . . .?”

“இந்து . . . ரீ ஆறுது எவ்வளவு நேரம் நித்திரையால எழும்பி. . . இன்னும் நைற்றி மாத்தல்ல என்ன? நானும் பார்க்கிறன் ஒரே அவவுக்கு இந்த உடுப்பு ஒண்டுதான். ராவெண்டும் இல்ல, பகலெண்டும் இல்ல, ஒரு ஒழுங்கான சட்ட கிடைக்கிறதில்லையே உனக்கு, கழட்டு பாப்பம் இத”

அம்மா குசினிக்குள் இருந்தபடி தொண்டை கிழியக் கத்தித் தீர்க்கிறாள்.

இந்துவுக்கு வெளியே சென்று செய்ய வேண்டிய வேலைகள் யாவும் ஞாபகத்துக்குவர அக்காவுடன் கதையைத் துண்டித்துக்கொண்டு ரீயை எடுக்க குசினிக்குள் செல்கிறாள்.


படிப்பகம்

www.padippakam.com

தந்தையை வன்செயலுக்குப் பலிகொடுத்த இந்துவின் குடும்பம், ஆண் என்ற குடும்ப அங்கவஸ்திரத்தை இழந்து விட்டிருந்தது. குடும்பத்தில் இரண்டு பெண், ஒரு ஆண்.

தந்தையை இழந்தபின்னர் சகோதரனுடைய நிழல் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என நினைத்திருந்த அந்த மூன்று பெண்களும் ஏமாந்து போனார்கள்.

சகோதரனும் ஒருபெண்ணை எடுத்துக்கொண்டு தனியே வாழப் போய் விட்டான். சமூகநல் நிறுவனங்களின் உதவியுடன் மூன்று பெண்களும் வாழ்ந்துவரும் போதுதான் சகோதரி சாந்திமதிக்கு திருமணம் ஒன்று கைகூடியது. ஆண்துணை தேவை என்ற பாரம்பரியத்துக்குள் ஊறிப்போய் உழன்றுகொண்டிருக்கும் அந்தச் சாதாரணப் பெண்கள் சிவநாதனை சாந்திமதிக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள்.

தங்கள் குடும்பத்திற்கு ஆண்துணை ஒன்று கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் நிம்மதிப்பெருமூச்சு விட்டாள் தாய் அன்னபூரணி.

சாந்திமதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவளுக்கும் சிவநாதனுக்கும் இடையே ஏற்பட்ட சாதாரண சிறுசிறு பிரச்சினைகள் விஸ்பரூபம் கொண்டு அவளது இல்லறவாழ்வை இரண்டாக்கி விட்டது. கட்டியவனைத் தூக்கி எறிந்துவிட்டு தாயோடு வந்து ஒட்டிக்கொண்டாள் சாந்திமதி.

ஒரு பெண்ணைப் பற்றி இன்னொரு பெண்தான் புரிந்துகொள்ள முடியும். பெண்ணின் பிரச்சினைகள் பெண்ணால் உணரப்படுவது போல் வேறு எவராலும் உணரப்படுவதில்லை.

சாந்திமதிக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் அன்னபூரணியும் தனது வாழ்க்கையில் சந்தித்தவைதான். ஆனால் அவற்றைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய நிலையிலும், முடிவெடுக்கக் கூடிய நிலையிலும் அன்னபூரணி இருக்கவில்லை. அதற்கிடையே வன்முறை அவள் கணவனைக்காவு கொண்டுவிட்டது.

இவை யாவற்றையும் பார்த்தும், அனுபவித்தும் வாழ்ந்துவரும் கடைசிப் பிள்ளைதான் இந்து. இப்போதைக்கு தன்னுடைய வாழ்க்கை


படிப்பகம்

www.padippakam.com

பற்றித் தீர்மானிக்கக் கூடிய ஒரேயொரு தைரியமாக இந்துவிடமிருப்பது அவளது உத்தியோகம் ஒன்றுதான்.

பொருளாதார பலத்தால் மாற்றங்கள் ஏற்படுத்துவது என்பது திருப்தியான முழு வெற்றியைப் பெற்றுத்தந்து விடும் எனக் கருத முடியாது. சிந்தனைகளை வலுப்படுத்த பொருளாதாரம் ஒரு பக்கத்துணை. ஆனால் முழுவதும் அதுவாகிவிட முடியாது.

"நான் குளிச்சிற்று வெளிக்கிடப் போறன் அம்மா"

"எங்கையடி இந்து?"

"எத்தின தரம் உங்களிட்டச் சொல்லுறது? இரவு சொன்னனான் தானே? திரும்பத் திரும்பக் கேக்கிறியள்!"

"மறந்திட்டண்டியம்மா!"

"என்ன மறதி . . .? வேறென்ன உங்களுக்கு ஞாபகம் இருக்கு, உங்கட மகன் எத்தினியாம் திகதி கலியாணம் கட்டினதெண்டுறது உங்களுக்கு ஞாபகத்தில இருக்கும் என்ன . . .?"

"ஏனடி இப்ப அதக் கிழறுறா? இந்து டியேய் . . . உனக்கு ஆம்பிளப் பிள்ளை பிறந்தா உடனே கழுத்த நெரிச்சுக் கொண்டு போடடி! . . . இவன்கள் வேண்டாம்!" என்றாள் அன்னபூரணி.

எதிர்பார்க்கவேயில்லை இப்படி ஒரு வார்த்தை தனது பத்தாம் பசலித்தனமுள்ள தாயிடமிருந்து வருமென்று.

குடித்துக்கொண்டிருந்த ரீ கப்பை அரைவாசியில் நிலத்தில் வைத்தாள். குந்தியிருந்தபடியே எதிரே இருந்த தாயை மெதுமெதுவாகவே தலையை உயர்த்தி நிமிந்து பார்த்தாள் இந்து.

குனிந்தபடி வாழ்ந்துவிடு! என்று சொல்லும் இவளா? நைற்றி இரவுக்குச் சொந்தமானது என்று சற்று முன்புதானே கூறினாள். இவளா அவள், இந்துவுக்குத் தாயைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஒரு காலத்தில் தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றி வணங்கி வாழ்ந்தவள். இறக்கும்வரை கணவனுக்கு நல்ல மனைவியாக இருந்தவள்.


படிப்பகம்

www.padippakam.com

இவளுக்குள் எப்படி இந்தத் திடீர் மாற்றம் ஏற்பட்டது. அல்லது நீண்ட காலமாகவே இருந்த இந்த வார்த்தை இப்போதுதான் வெளிப்பட்டதா? அப்படி என்றால் மாற்றங்கள் எல்லாம் சந்தர்ப்பங்களுக்காக காத்துக் கொண் டிருக்கின்றனவா? சந்தர்ப்பம் சரியாக அமைந்தால் நமது சிந்தனைகளும், எண்ணங்களும் வென்றுவிடுமா?

நிச்சயம் நிச்சயம் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் வாழ்க்கையின் அனுபவ நேர்த்திகளும் நமது சிந்தனைகளை வெற்றி கொள்ளச் செய்துவிடும்! அன்னபூரணியின் வார்த்தையைப் போல!




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர்களுடன் . . .

சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்.

அன்புடையீர்,

வணக்கம்.

தொடர்ந்து உங்கள் நிலையத்தின் வெளியீடுகள் எமக்கு கிடைத்து வருகின்றது. அத்தோடு, உங்கள் நிலையத்தின் பணிகள் உங்களின் வெளியீடுகள் மூலமும், பத்திரிகைகள் வாயிலாகவும் அறிந்து வருகின்றோம். சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகளை அறிந்து பலமுறை வியந்துள்ளேன். மனதுக்குள்ளேயும் பாராட்டி உள்ளேன். மேலும் உங்கள் நிறுவனத்தின் பெண்களுக்கான சகல பணிகளும் தொடர வாழ்த்துகின்றோம்.

எமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் இலக்கிய செயற்பாடுகள், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் அறிந்திருப்பீர்கள். மலையகத்தில் குறிப்பாக கண்டியில் உங்கள் வெளியீடுகளின் கண்காட்சியும், உங்கள் நிலையத்தின் பெண்களுக்கான பலவிதமான நல்பணிகளைப்பற்றிய கருத்தரங்கு ஒன்றினையும் நடத்தலாம். மலையகத்தில் உள்ள படித்த பெண்களையும் தங்கள் நிலையத்தோடு இணைத்துக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமைவதுடன் மலையகத்தில் உள்ள புத்தி ஜீவிகளின் ஆதரவினையும் பெறலாம்.

நன்றி

இரா.அ. இராமன்.



படிப்பகம்

www.padippakam.com

சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையம்.

கோறளைப்பற்று வடக்கு
அபிவிருத்தி ஒன்றியம்,
திருமலை வீதி,
வாகரை.

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்.**

மேற்படி தங்கள் நிலையத்தினால் வெளியிடப்படும் "பெண்" சஞ்சிகையினால் எங்களுக்கு மிகவும் பயன்கிடைத்தது. அதாவது "பெண்", பெண்கள் மத்தியில் ஏற்படும் பல பிரச்சனைகளையும் அதற்கான நடவடிக் கைகளையும் - கவிதை, கட்டுரை, சிறு கதை என்பவற்றின் மூலம் மிகவும் பயனுள்ள தகவல்களாய் வெளியிடுவதன் மூலம் பெண்கள் விழிப்படை வதற்கு வழிவகுக்கின்றது.

அதனடிப்படையில் தாங்கள் எங்கள் நிறுவனத்திற்கு பல சஞ்சி கைகளை அனுப்பியிருந்தீர்கள். அதன் மூலம் நாங்களும் பெண்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகள் எவை என்பதனை மிகவும் தெளிவாக விளக்கக் கூடியதாய் இருந்தது. தற்போது உங்களிடம் இருந்து இச்சஞ் சிகைகள் வருவதும் தடைப்பட்டுள்ளது. எனவே எங்கள் பகுதியில் உள்ள பெண்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்ப்பதற்கும், பெண்கள் அமைப்புக்களை அமைத்து அதனை சிறந்த முறையில் நடை முறைப்படுத்துவதற்கும் சஞ்சிகை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால் மீண்டும் தங்களிடம் இருந்து சஞ்சிகைகளை பெற விரும்பு கின்றோம். எனவே தயவுசெய்து இச்சஞ்சிகைகளை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

இணைப்பாளர்



படிப்பகம்

www.padippakam.com

சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையம்.

த. பேரின்பராஜா
கொக்கட்டிச்சோலை
18.11.2002

மேற்படி தங்கள் அமைப்பினால் அனுப்பிவைக்கப்பட்ட வெளியீடு கள், செய்தி மடல் என் கரம் கிடைக்கப்பெற்றது மிக்க சந்தோஷசம்.

தங்கள் அமைப்பு இக்காலகட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டி ருந்த பெண்களின் நலத்திற்கும், அவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் வழிகாட்டி உதவுவதை பாராட்டுவதோடு பெருமிதமடைகிறேன். அஃது மட்டுமன்றி தங்கள் அமைப்பின் பெருமை அகில இலங்கை மட்டுமன்றி உலகலாவிய ரீதியில் வளர இப்புத்தாண்டு பிறப்பில் வாழ்த்துகின்றேன். மேலும் தங்கள் சேவையினால் எங்களைப் போன்ற கிராம மட்டத்தில் இலை மறை காயாக வாழும் பெண்களின் திறமைகள் கிணற்றுத்தவளை போலன்றி வெளியு லகத்தில் வருவதற்கு ஒரு உந்துசக்தியாக இருந்து உதவி செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் தங்கள் வெளியீடு, செய்திமடல் பெண்களின் தராதரத்தை உயர்த்த பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி இருப்பதனால் தொடர்ந்து அறிய ஆவலாகவுள்ளேன். பழைய இதழ்களும் கைவசமிருப்பின் அனுப்பி வைத்தால் நல்லது என கேட்டு நிறைவுசெய்கிறேன்.

என்றும் அன்புடன்
பேரின்பராஜா. த


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வருடாந்த சந்தா – பெண்

| | |
|---|---|
| ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா | US $ 5 |
| இந்தியா | ரூபா 300.00 |
| இலங்கை | ரூபா 100.00 |

சந்தா விண்ணப்பம் 200......
பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்

பெயர் : ..............................................................................
விலாசம் : ..............................................................................
திகதி : ..............................................................................

*இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.*

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல: 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
*No : 20, Dias Lane,*
*Batticaloa.*
*Sri Lanka.*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



ISSN -1391 - 6122

St. Joseph's Catholic Press, Batticaloa.

crossuresh@cp

படிப்பகம்